Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

தனிப் பிரதி ரூ. 9/-

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 26 இதழ் - 5 மே 2013

## பதினாறாம் வேனிற்கால வேதாகம முகாம்

மே 6.8.2013 - ஏலகிரிமலை



முகாமில் சிறுமிகள்



ஏலகிரி வேதாகம முகாமில் கலந்துகொண்ட கிறிஸ்து சேனையின் இளைய தளபதிகள்

## வேனிற்கால முகாமிற்காக ஜெபித்து, பங்கு பெற்ற உங்கள் அனைவருக்கும் நன்றி ! நன்றி !! நன்றி !!!

வட மாவட்டங்களில் மே மாதம் முதல் 10 நாட்களில், தமிழகத்தில் நிலவிய அசாதாரண அரசியல் சூழ்நிலை காரணமாக பேருந்து போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும், பதினாறாம் வேதாகம முகாமிற்கு தமிழகத்தின் நான்கு திசைகளிலிருந்தும், பாண்டியிலிருந்தும் 450 க்கும் மேலான பரிசுத்தவான்களும், தொலைக்காட்சி நேயர்களும் வழக்கம் போல உற்சாகமாக பங்கு பெற்று, தேவ வழி நடத்துதலினால் நிறைந்த ஆசிர்வாதங்களுடன் திரும்பிச் சென்றனர்.

இப்படி ஆர்வமாகப் பங்கு பெற்று, தங்கள் விசுவாசத்தைப் சிறப்பான முறையில் வெளிப்படுத்திய உங்கள் ஒவ்வொருவருக்கும், சவாலான சூழ்நிலையிலும் விசுவாசிகளை ஊக்கப்படுத்தி அழைத்து வந்த தேவனுடைய கனமான ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறோம்.

இம்முகாமில் 15 விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தனர். இவர்களுக்காக ஜெபியுங்கள்.

– ஆசிரியர்

### ஆசானின் அறிவுரையிலே....


1. ஆசிரியர் உரை............1
2. ஏன் நாங்கள் ஜெபத்தில்.... 9
3. பெண்கள் பகுதி...............13
4. வாலிபர் பகுதி....................16
5. சிறுவர் பகுதி....................19
6. நல்ல உக்கிராணக்காரனாக..............21
7. நிழலும், நிஜமும் ...........24
8. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ......29


### உங்கள் கவனத்திற்கு

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 MAY 2013 Issue - 5


ஆசிரியர் உரை

# உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று

இப்பாழுலகை மீட்கும்படியாக மானிட ரூபமெடுத்து வானத்திலிருந்து இறங்கி வந்த இயேசுவானவர் நன்மை செய்கிறவராகப் பெலஸ்தீனா தேசம் முழுவதும் சுற்றித் திரிந்தார் என்பது வேதம் வெளிப்படுத்தும் ஓர் உண்மை. அப்படி நடந்து திரிந்த இயேசுவானவர், எண்ணிலடங்கா அற்புதங்கள் செய்ததோடு ஏராளமான காரியங்களை உபதேசங்களாகப் போதித்தார். அவர்தம் வார்த்தைகளை நாம் குனிந்து கவனித்தால், அவை ஒரே விதமாக இல்லாமல் ஒரு பெரிய கலவையின் கூறாகவே காணப்படுகிறது. ஆம், அவைகளில் பாசமும், பரிதாபமும் இருக்கும்; நேசமும், நெருக்கமும் இருக்கும்; உரிமையும், உருக்கமும் இருக்கும்; கனிவும், கண்டிப்பும் இருக்கும், எச்சரிப்பும், எதிர்பார்ப்பும் இருக்கும்; அத்தோடு ஏக்கமும், ஏமாற்றமும் கூட இருக்கும். இப்படித்தான் அவருடைய பிரசங்கத்தின் பாணியும், உபதேசத்தின் தன்மையும் இருந்தது. ஜனங்களின் சரீரத் தேவைகளின் ஆழத்தை அறிந்தவராகவும், அதை விட முக்கியமாக, அவர்களின் ஆவிக்குரிய அவசியங்களின் நாடித் துடிப்பை உணர்ந்தவராகவும் இருந்தார். இவைகளினடிப்படையில் தனது உபதேசங்களை அமைத்தபடியால் தான், இன்றளவும் உலகம் அவரை ஓர் ஒப்பற்ற போதகர் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட இயேசுவானவர்தான், ஒரு சமயம் மிகுந்த ஏமாற்றமடைந்தவராய் " உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று " என்று கண்ணீர் மல்கக் கூறியுள்ளார். இப்பூமியின் வாழ்க்கையில் ஒரு காரியத்தைச் செய்வதற்கும், செய்யாமலிருப்பதற்கும் மனது மிகவும் முக்கியமானது. ஒன்றைச் செய்தே ஆக வேண்டுமென்ற மனது இருக்குமானால், இமயம் கூட சருகு

போல தோன்றும். அதே நேரத்தில், ஒன்றைச் செய்யக்கூடாது என்று நினைத்து விட்டால் துரும்பு கூட உத்திரமாகக் காட்சி தரும். குறிப்பாக, ஆவிக்குரிய வாழ்க்கையில் மனமில்லையானால் ஓர் அங்குலம் கூட நகர முடியாது. ஒருவேளை, அப்படியே நகர்ந்தாலும் அங்கே காரியங்கள் உருப் படியாய் இருக்காது. இந்த உண்மையைப் பச்சையாக உணர்ந்திருந்த படியால் தான், ஆண்டவருக்கு முன்னோடியாய் வந்த யோவான்ஸ் நானகனும், இயேசுவும் மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள் என்று கத்தி கத்திப் பிரசங்கித்தார்கள்.

சரி, இப்பொழுது, நம்முடைய இயேசுவானவர், உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று என்று எப்பொழுது சொன்னார், யாரைப் பார்த்துச் சொன்னார், எங்கிருந்து சொன்னார், ஏன் சொன்னார் என்பது பற்றியெல்லாம் கொஞ்சம் தெரிந்து கொண்டால், இத்தலைப்பைச் சிறப்பாக அறிந்து கொள்வதற்கும், இதிலிருந்து தேவன் நமக்கு வெளிப் படுத்த விரும்பும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கும் மிகுந்த ஒத்தாசை யாக இருக்கும். ஆகவே, நமது வழக்கத்தின்படியாக உள்ளே செல்லுவோம்.

சுமார் மூன்றரை ஆண்டுகள் பரலோக தேவனின் திருப்பணியை ஓய்வு ஒழிச்சலின்றிச் செய்து வந்த இயேசுவின் பூமிக்குரிய வாழ்வின் நாட்கள் முடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. கொல்கொதா மலையின் உச்சிக்கு பாரச் சிலுவையோடு ஊர்ந்து செல்லச் சில நாட்கள் தான் எஞ்சி இருந்தது. அப்பொழுது தான் எருசலேமின் குடிகளைப் பார்த்து, குறிப்பாக தேவாலயத்தைப் பார்த்து இப்படியாகக் கதறியுள்ளார். " எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து உன்னி டத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சு களைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று " (மத் 23:37) என்று.

இப்படி மனம் குமுறி இயேசுவானவர் எங்கிருந்து கூறினார் என்பது பற்றி இரு வேறு கருத்துக்கள் உள்ளன. மத். 24:1-ல் இயேசு தேவாலயத்தை விட்டு புறப்பட்டுப் போகையில் என்றுள்ளதால், தேவாலயத்திலிருந்து தான் கூறினார் என்பது முதல் கருத்து. மற்றொன்று, அவர், சிலுவைக்கு முன்பாக, கடைசி முறை ஒலிவ மலைக்குச் சென்று, அங்கிருந்து இறங்கி வருகையில், சுமார் 500 அடி தூர இடைவெளியில், கெதரோன் பள்ளத்தாக்கிற்கு இப்புறத்தில் நின்று கொண்டு, ஏராளமான ஜனங்கள் சூழ்ந்திருக்கையில் கம்பீரமாகக் காட்சி தந்த எருசலேம் தேவாலயத்தைப் பார்த்துக் கூறினார் என்பது. இந்த இரண்டாவது கருத்துச் சரி என்றால், சில வருடங்களுக்கு முன் நானும், என் துணைவியும் அந்த இடத்தை நேரில் பார்த்தோம். அன்றைக்கிருந்த தேவாலயத்தை, எருசலேமின் வேறு எந்தப் பகுதியிலிருந்து பார்த்தாலும் அதைவிடச் சிறப்பான கோணத்தில் பார்க்க முடியாது. அங்கிருந்து, எவ்வளவு நெஞ்சு நோக இயேசுவானவர் இப்படிக் கூறியிருப்பார் என்பதை நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது.

இந்த எருசலேமுக்காக, எருசலேமின் ஜனங்களுக்காகத் தேவன் ஆதியிலிருந்து செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆதியாகம புத்தகத்திலேயே இடம் பெற்று, இன்றளவும் உலகின் முதன்மைப்

பட்டணங்களுள் ஒன்றாகத் தொடர்ந்து திகழ்ந்து வருவது எருசலேம் மாத்திரமே. வேறு எதற்கும் இச்சிறப்பு கிடையாது. இப்பட்டணத்தை வேதாகமம் பரிசுத்த ஸ்தலம் (சங். 46:4) என்றும், உண்மையுள்ள நகரம் என்றும் (ஏசாயா 1:21) பரிசுத்த நகரம் (மத். 4:5) என்றும் அழைக்கிறது.

இப்படி, தேவனுடைய இருதயத்தில் இடம் பிடித்த பட்டணமாக இருந்து, பரிசுத்தம், உண்மை என்ற உன்னத வார்த்தைகளுக்கு உரிமை கொண்டாடும் ஒன்றாக இருந்தாலும், இதன் செயல்பாடு தேவனுக்குப் பிரியமானதாக தொடர்ந்து இருக்கவில்லை. இயேசு வருவதற்குப் பல காலம் முன்பாகவே, தேவனுக்கு விரோதமான பாதையில் பயணம் செய்ய ஆரம்பித்ததோடு, தேவ திட்டத்திற்கு எதிராகச் செய்யவும் தன்னில் துணிகரம் கொண்டு விட்டது. தேவன், தன்னுடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து எச்சரித்து வந்தார். " எருசலமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு, எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும் " (எரே 4:14) என்றும், இன்னும், எரேமியா 6:8-ல் எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டு பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்தி கேள் என்றும் கூறியுள்ளார்.

தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துத் திருந்தாத எருசலேமுக்காகவும், பூமியின் ஏனைய மக்களுக்காகவும் தான், தன் கடைசி கட்ட முயற்சியாகத் தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி அவருடைய திருவார்த்தைகளுக்காகிலும் செவி கொடுப்பார்களென்று எதிர்பார்த்தார். அவருக்கும் அவர்கள் செவி கொடுக்கவில்லை. மத். 23:37-ம் வசனத்தில் இயேசு ஆண்டவர் எத்தனை தரமோ என்று கூறி, தான் எடுத்த முயற்சி எவ்வளவு அதிகமானது என்பதை வெளிப்படுத்துவதோடு, எடுத்த முயற்சிகளின் தன்மை பற்றியும் இப்படியாகக் கூறுகிறார். " கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்க்கும் வண்ணமாக " என்று. நம்ம ஊர் கோழிகள் தன் குஞ்சுகளைப் பாதுகாப்பதற்குப் படும் பிரயாசை களைக் காட்டிலும், வனாந்திரப் பகுதிகளை அதிகம் கொண்ட பெலஸ்தீனா தேசத்துக் கோழிகள் அதிக விழிப்போடிருந்து செயல்பட வேண்டும். ஏனெனில், உடனடியாக ஓடி ஒதுங்குவதற்கு முட்புதர்களோ, பதுங்கு வதற்குத் தோதான அடர்ந்த செடி கொடிகளோ அங்கு இல்லை. அவர்கள் மீது தான் கொண்டிருந்த நேசம் எவ்வளவு கரிசனையுடன் கூடியது என்பதை இப்படிச் சொல்வதன் மூலம் இயேசு விளக்கியுள்ளார்.

இப்படியெல்லாம் பிரயாசை எடுத்தும் அவர்கள் திருந்தவில்லை. திருந்துவதற்கு மனம் இல்லாமற் போயிற்று. யோவான் நற்செய்தியாளரும் இதைத்தான் கூறுகிறார். அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை என்று (யோவா 1:11). அப்படி அவர்கள் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதால் அவர்கள் மீது வரப்போகும் விளைவை எண்ணிப் பார்த்தார். வசனம் 38-ல் இதோ உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும் என்று சொல்லப் பட்டுள்ளது. எருசலேம் பாழாகிப் போகும் என்பதையும், அதின் குடிகள் அழிக்கப்படுவார்கள் என்பதையும் நினைக்கும்போது அவருக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. ஏனெனில், உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க அவர் வராமல் (யோவா 3:17), இழந்துபோன எருசலேமின் குடிகள்

போன்றோரை இரட்சிக்கும்படியாகவே வந்தார். (லூக். 19:10) ஆகவே தான், எருசலேமை நினைத்து, எப்படி அந்தரத்தில் தொங்க நேர்ந்த தன் துன்மார்க்க மகன் அப்சலோமுக்காகத் தாவீது புலம்பினானோ, அது போலவும் (II சாமு. 18:10,33) சொல்லப்போனால், அதை விடப்பல மடங்கு மேலாகவும் எருசலேமுக்காகப் புலம்பினார்.

சரி, பழைய ஏற்பாட்டின் காலத்திலும், இயேசுவின் நாட்களிலும் தான் இந்த எருசலேமின் குடிகள் தங்கள் பிடரியைக் கடினப்படுத்தினார்களென்று நாம் நினைக்கத் தேவையில்லை. இயேசு அவர்களுக்காக வந்து, வாழ்ந்து, மரித்து, உயிர்த்துப் பரமேறி சுமார் 2000 ஆண்டுகள் ஆகிவிட்ட இன்றைய நாட்களிலும், அவர்களின் நிலை அப்படியே தான் உள்ளது. பூச்சக்கரத்தின் எத்திசையிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் எண்ணிலடங்கா ஜனம், இயேசு ஆண்டவரின் அருமை பெருமைகளை அறிந்து, உணர்ந்து, ஏற்று, அவர் பிறந்த மண்ணைப் பார்க்க நாள்தோறும் பயபக்தியோடு வந்து கொண்டிருக்கும்போது, எருசலேமிலும், பெலஸ்தீனாவிலும் வாழும் யூதர்கள், அதைப் பற்றிய எவ்வித தொடுதலுமின்றி, பழமையை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதை நேரில் பார்த்தபோது, உண்மையில் பரிதாபமாகவே இருந்தது.

சாலமோன் கட்டிய தேவாலயத்தைச் சுற்றிலுமிருந்த மதில் சுவரின் எஞ்சிய பகுதி என்று ஒரு குட்டிச்சுவர் இருக்கிறது. அதற்கு புலம்பல் சுவர் (Wailing Wall) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தப் பொல்லாத யூதர்கள் ஆண்களும், பெண்களுமாக திரண்டு வந்து, அந்த குட்டிச் சுவரைத் தொட்டுக் கொண்டும், பிடித்துக் கொண்டும், அதில் மோதிக் கொண்டும் ஓவென அழுகிறார்கள். மேசியாவே வாரும், தேவாலயத்தை திரும்பவும் கட்டும், எருசலேமில் வீற்றிருந்து அரசாளும் என்று முறையிடுகிறார்கள். இதே எருசலேமின் ஒரு பக்கம், மேசியாவாகிய இயேசு இரட்சகர் வந்து போனதற்குப் பலமான சாட்சியாக திறந்து கிடக்கும் கல்லறை இருக்கிறது. ஆனால், மறுபக்கமோ, மேசியாவே வாரும் என்று ஒப்பாரி கேட்கிறது. இந்தக் காட்சியைப் பார்க்கிறதற்கு எவ்வளவு வேதனையாயிருக்கிறது தெரியுமா? ஆக, இன்றைக்கும் நிலைமை அப்படித்தான் உள்ளது.

எருசலேமின் குடிகள், இயேசுவை ஏற்றுக் கொள்ளாததற்கு நிறைய காரணங்களை நாம் அடுக்க முடியும் என்றாலும், அவைகளில் பிரதானமாக ஒரு மூன்றை நாம் பார்த்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

### I தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணினார்கள்

எருசலேமின் குடிகள் இயேசுவுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான காரணங்களில் முதலாவதாக, அவர்கள் வேத வசனங்களை அற்பமாய் எண்ணியதைக் கூறலாம்.

மோசேயைக் கொண்டு பிரமாணங்களை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்த தேவன், அப்பிரமாணங்களுக்கு அவர்கள் என்ன மரியாதை கொடுக்க வேண்டுமென்பதையும் வெளிப்படுத்திவிட்டார் (உபா. 5:1)

மோசேயின் காலத்துக்குப் பிறகும், தேவன் அவருடைய வார்த்தைகளின் படியாகச் செய்வது மிகவும் அவசியம் என்பதை மீண்டும் வெளிப்படுத்தி யுள்ளார். " இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவன மாயிரு என்று " (யோசு. 1:8). ஆனால், இவர்களுக்கோ வேதவாக்கியங்கள் என்ன சொல்லுகிறதென்பதைக் குறித்த பாரம் ஒரு போதும் பெரிதாக இருந்ததில்லை.

வேத வாக்கியங்களைக் கொண்டு இவர்கள் இயேசுவை அறிந்திருக்க முடியுமா என்று பார்த்தால், நிச்சயமாக முடியும் என்பதே பதிலாக உள்ளது. எப்படியெனில், " ....என்னைக் குறித்து சாட்சியிடுகிறவைகள் வேத வாக்கியங்கள் " என்று இயேசு அழுத்தமாகக் கூறியுள்ளார். (யோவான் 5:39) இயேசுவின் கூற்றை பிலிப்பு மெய்யாக்கியுள்ளதைப் பாருங்கள். பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்பு, கபடற்ற உத்தம இஸ்ரவேலனாகிய நாத்தான் வேலைக் கண்டு, நியாயப்பிரமாணத்திலே மோசேயும், தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம் என்றான். (யோவா 1:45). அருமையான வர்களே, தேவனையும், அவருடைய குமாரனையும், அவருடைய சித்தத்தையும் அறிந்து கொள்வதற்கு வேத வாக்கியங்கள் கண்டிப்பாகப் போதுமானது. வேதவாக்கியங்களில் உள்ளதை எருசலேமின் குடிகள் புரிந்து கொள்ளமுடியாமற் போனது, வேதவாக்கியங்களின் குறைபாடல்ல. மாறாக, இயேசுவானவர் மத். 13:15-ல் சொல்லியுள்ளது போல அவர்கள் இருதயம் கொழுத்திருந்ததே காரணம்.

சரி, இப்படிப்பட்ட, வேதவசனங்களின் சாட்சியும் போதாதென்று, யோவான் ஸ்நானகனும், இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்தார் (யோவான் 1:34). இந்த யோவானின் சாட்சியையும் ஜனங்கள் ஏற்றுக்கொள்ளாத போது, இயேசு சொன்னதைத் தான் கொஞ்சம் பாருங்களே! " யோவானுடைய சாட்சியைப் பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது " என்றார் (யோவா 5:36) இதற்கு மேலும், இயேசு தேவனுடைய குமாரனென்று ஏற்றுக்கொள்வதற்கு வேறு என்ன தான் சாட்சி வேண்டும், சொல்லுங்கள்!

எருசலேமின் குடிகளும், யூதர்களும் இப்படித் தரம் தாழ்ந்து நடந்தி ருக்கிறார்களே என்று எண்ணி, வியந்து நிற்கும் அருமையான தேவனை நேசிக்கும் ஜனமே! நம்முடைய வாழ்வில் நாம் என்ன செய்து கொண்டுள் ளோம்? வேத வாக்கியங்களுக்கு எப்படிப்பட்ட மரியாதை கொடுத்து வாழ்ந்து கொண்டுள்ளோம்? வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று இயேசு சொல்லியுள்ளாரே, நாம் உண்மையில் ஆராய்ந்து பார்த்துக் கொண்டுள்ளோமா? வேத வாக்கியங்களின் ஒட்டு மொத்த போதனை என்ன என்றும், இன்றைக்கு என்னைக் கட்டுப்படுத்தும் உபதேசம் எது என்பதையும் நம்முடைய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துவிட்டோமா? வேத வாக்கியங்களில் தான் நித்திய ஜீவன் உண்டு என்பது எப்பொழுதும் நம் நினைவில் நிற்க வேண்டும்.

அன்பானவர்களே, வேத வாக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மனித கோட்பாடுகளுக்கும், பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தபடியால் தான், குட்டிச் சுவற்றைக் கட்டிப்பிடித்து அழ வேண்டிய அவசியம் யூதர்களுக்கு வந்திருக்கிறது. ஒருவேளை, நாமும் அவர்களைப் போல புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அற்பமாக எண்ணி, இயேசு கட்டின ஒன்றான மெய்ச் சபையைப் பற்றி (மத். 16:18) அக்கறையில்லாமல் வாழ்வோமானால், நரகத்திற்குப் போய் அங்கே நித்திய காலமாய் அழ வேண்டிய நிலை வந்து சேரும். ஆகவே, இயேசுவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு மதிப்பளித்து நமது ஆன்மீக வாழ்வை நடத்துவோம்.

**II தங்களுடைய காரியங்களில் நாட்டமுடையவர்களாக இருந்தனர்**

எருசலேமின் குடிகள், இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இரண்டாவது காரணமாக, அவர்கள் தங்களுடைய காரியங்களில் அதிக நாட்டமுடையவர்களாயிருந்ததைக் கூறலாம்.

பூமியில் வாழும் ஒருவன் பூமிக்கடுத்த சில காரியங்களில் நாட்டமுடையவனாக இருப்பதில் எந்தத் தவறும் இல்லை. ஏனெனில், இப்பூமியில், தேவன் அனுமதிக்கிற காலமெல்லாம் அவன் வாழ்ந்தாக வேண்டும். அதே நேரத்தில், தேவனுக்கடுத்த காரியத்திற்கும், சொந்தக் காரியத்திற்குமுள்ள வேறுபாடு தெரிந்தவனாகவும், எதற்கு என்ன முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதில் தெளிவுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இந்த அறிவு எல்லாருக்கும் இருக்க வேண்டுமென்பது தேவனுடைய விருப்பம், இயேசுவின் எதிர்பார்ப்பு. இதற்காகத்தான், இயேசுவானவர், " ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி அநேகரை அழைப்பித்தான் " என்ற உவமையைச் சொன்னார் (லூக். 14 ஆம் அதி) அவ்வுவமையில் மூன்று பேருமே சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கி, தங்களுடைய காரியங்கள் தான் பெரிது என்பதை வெளிப்படுத்தினர்.

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த ஜனங்களுக்கு பக்தி வாழ்வும், ஆராதனைக்குரிய காரியங்களும் கூட ஆதாயத் தொழிலாக மாறிவிட்டது. ஆகவே தான் உலகின் பல பாகங்களிலிருந்து எருசலேமுக்கு வருபவர்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டனர். அன்பான இயேசுவுக்கு, இவர்களின் இந்தச் சுயநலப் போக்கு ஆத்திரத்தையும், கோபத்தையும் ஏற்படுத்தியது. சவுக்கெடுத்து அவர்களை விரட்டியதோடு, என்னுடைய வீட்டை கள்ளர் குகையாக்கினீர்கள் என்றும் சாடினார் (மத். 21:12,13).

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய ஒரு காரியம், இவர்கள் இப்படிப்பட்ட தேவ விரோதச் செயலைத் தெரியாமல் செய்யவில்லை என்பது. எப்படியெனில், இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினதற்குப் பிறகு கூடின ஆலோசனைச் சங்கத்தார், நாம் இவனை இப்படியே விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து, " நம் முடைய ஸ்தானத்தையும் ஜனத்தையும் அழித்துப் போடுவார்களே " என்றார்கள் (யோவா. 11:47,48) ஆக, இந்தத் திருடர்களின் சிந்தையெல்லாம் தொழில், வருமானம், ஸ்தானம்! பக்தி என்பது ஒரு வேஷம். இயேசுவின் வார்த்தைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள

மனமில்லாமற் போனதற்கான காரணம் என்னவென்று இப்பொழுது விளங்குகிறதா?

அன்பானவர்களே, இயேசுவின் காலத்து எருசலேமின் குடிக ளோடும், யூத ஜனங்களின் நிலையோடும் இன்றைய கிறிஸ்தவத்தின் சூழ்நிலையை ஒப்பிட்டால் அப்படியே அச்சில் ஊற்றி எடுத்தாற் போல இருக்கிறது தானே. ஆச்சரியமாக இருக்கிறதா? அன்றைக்கு எப்படி தேவனால் அனுப்பப்பட்ட இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போச்சு என்று எண்ணினார்களோ, அதேபோல, இன்றைக்கு இயேசுவால் கட்டப்பட்ட ஒன்றான மெய்ச் சபையையும், புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டால் தொழிலும், வருமானமும், அந்தஸ்தும் போய்விடும் என்று அநேக பிரசங்கிகளும், பாரம்பரியமும், கௌரவமும், பகட்டும் போய் விடு மென்று மார்க்க முன்னோடிகளும், இனிமேல் கொள்கையையும், நம்பிக்கை யையும் மாற்றினால் அது மரியாதைக் குறைவை ஏற்படுத்துமென்று சராசரி கிறிஸ்தவனும் எண்ணுகிறார்கள். சரிதானே! மொத்தத்தில் தேவகாரியங் களைக் குறித்த கிறிஸ்துவின் சிந்தை பெரும்பாலானவர்களுக்கு இல்லை என்பது மாத்திரம் திட்டமாக தெரிகிறது.

ஆனால், நாம் என்றைக்கு நமது காரியங்களுக்கான சிந்தையைக் குறைத்து அவருடைய காரியங்களில் நாட்டம் செலுத்துகிறோமோ அப்போது தான் தேவனுக்கடுத்தவைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**III மற்றவர்களுடைய நினைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்**

எருசலேமின் குடிகள் இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவி கொடுக்க மனமில்லாமற் போனதற்கான இன்னுமொரு காரணமாக, அவர்கள் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டதைக் கூறலாம்.

இவர்கள் இப்படிச் செயல்பட்டார்கள் என்று நான் கூறவில்லை, வேத வசனங்கள் கூறுகிறது. அதுவும், ஒரு முறை அல்ல, பலமுறை. ஆம், யோவான் நற்செய்தியாளனுடைய நூலில், தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக் கொள்ளு கிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவா 5:44) என்று இயேசு கேட்டுள்ளார். இன்னும், அதே நூலின் 12 ஆம் அதிகாரம் வசனங்கள் 42,43 சொல்லுவதையும் கவனியுங்கள். ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்காதபடி பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந் தார்கள். "*அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்*". மனிதர்களுடைய எண்ணங் களுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களென்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்?


ஆனால், பழைய ஏற்பாட்டுப் பக்தன் ஆபிரகாமும், புதிய ஏற்பாட் டில் பவுலடியாரும் இக்காரியத்தில் எப்படிச் செயல்பட்டார்களென்று

உங்களுக்கு நினைவிலிருக்கிறதா? கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ (ஆதி. 12:1) என்று அழைத்த போது, அவன் யாருடன் ஆலோசனை செய்தான்? ஊரும், உறவும், நட்பும் என்ன நினைக்குமென்று அவன் எண்ணியிருந்தால், தேவனுடைய வார்த்தைகளுக்குக் அவனால் கீழ்ப்படிந்திருக்க முடியுமா? *விசுவாசிகளின் தகப்பன்* என்ற பெருமை அவனுக்குக் கிடைத்திருக்குமா? சொல்லுங்கள்.

அதுபோலத்தான் அப்போஸ்தலன் பவுலும் தன் இரட்சிப்பு விஷயத்தில் மாற்றாரின் கருத்துக்கு மருந்துக்குக் கூட மதிப்பளிக்கவில்லை. இயேசுவின் அழைப்பைத் தான் ஏற்றுக் கொண்ட விதம் பற்றிப் பின்னாளில் கலாத்தியருக்கு நிருபம் எழுதும் போது இவ்விதம் கூறியுள்ளார். "தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமா யிருந்தபோது, உடனே " *நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணவில்லை* " (கலா. 1:16) என்று. இப்படிப்பட்ட கீழ்ப்படிதலைத் தான் தேவன் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்.

அருமையானவர்களே, இன்றைய உலகமும், கிறிஸ்தவ சமுதாயமும் ஊருக்கும், உறவுக்கும், நட்புக்கும், மாம்சத்திற்கும், இரத்தத்திற்கும் மதிப்பளிக்காமல், தேவனுடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவி கொடுத்துக் கீழ்ப்படிவதில் எந்தளவு சிறந்து விளங்குகிறது? இது தான் சத்தியம் என்றும், இதுதான் இந்த வசனத்தின் பொருள் என்றும், இவைகள் தான் இரட்சிப்பின் திட்டத்துக்கான படிகள் என்றும், இதுதான் இயேசு வாக்களித்துக் கட்டின சபையென்றும் சொன்னால், எத்தனை பேர் அட அப்படியா, இத்தனை நாள் எனக்கு விளங்காமற் போய்விட்டதே என்று சொல்லி உடனே ஏற்றுக் கொள்ளுகிறார்கள்? மணிக்கணக்காகக் கேட்டு விட்டு, வாரக் கணக்காகச் சேர்ந்து படித்துவிட்டு, முடிவெடுக்க மாதக் கணக்கில் நாட்களையும் எடுத்துக்கொண்டு, கடைசியில் என்ன சொல்லு கிறார்கள்? நீங்கள் சொல்லுவதெல்லாம் சரிதான், வசனத்துக்குச் சரியான விளக்கம் கொடுத்தீர்கள். ஆனால், எங்க குடும்பம்... எங்க வேலை... எங்க சபை... எங்க ஊர்... எங்க சமுதாயம் ... என்று கூறி அப்படியே இழுக் கிறார்கள் தானே! எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு இப்படி யெல்லாம் இழுப்பது எப்படி நியாயமாகும் என்று எண்ணிப் பாருங்கள்? இந்த இடத்தில் அப்போஸ்தலன் பேதுருவும், யோவானும் ஆலோசனைச் சங்கத் தாருக்குக் கொடுத்த பதிலை நினைவுபடுத்த விரும்புகிறேன் " பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்திரமாக, *தேவனுக்குச் செவிகொடுக் கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவி கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்* " (அப். 4:19) என்று.

அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்திற்கு உடனடித் தேவை துணிவும், மன உறுதியும் கொண்ட தேவனை நேசிக்கும் ஜனங்கள். அவர் களால் தான் இயேசுவுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படியும் மனதைப் பெற்றுக் கொள்ள முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் அப்படிப் பட்டவர்களில் ஒருவராயிருக்க வேண்டுகிறேன். ஆமென்!.



# ஏன் நாங்கள் ஜெபத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

**Bro. J.C. சோட்**

ஜெபம் என்பது ஒரு வேதாகம மைய நோக்கம். ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது, சொல்வது அல்லது தேவனிடம் வேண்டிக்கொள்வது என விளக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இப்படிச் சொல்லியுள்ளார். " *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்* " என்று (பிலி. 4:6).

தேவனுடனான நம் உறவில், அவர் நம் தகப்பனாயிருக்கிறார், கிறிஸ்தவர்களாகிய நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். தேவனைப் பொறுத்தவரை அவருக்கு எதுவும் தேவை இல்லை. அவர் நித்தியமானவர், சர்வவல்லவர். அவர் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றும், உறைவிடமுமாயிருக்கிறார். எனவே தான், யாக்கோபு இப்படிச் சொல்கிறார். " *நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை* " (யாக். 1:17). பிள்ளைகளாயிருக்கும் நமக்கு தேவன் தேவை. தேவன் நம் தகப்பனாயிருக்கிறார். நாம் நம்முடைய எல்லாத் தேவைகளுக்கும், சோதனைகளை மேற்கொள்வதற்கான உதவிக்கும், பாவம் செய்யும்போது பாவமன்னிப்படைவதற்கும் நாம் தேவனிடம் செல்ல வேண்டும்.

இப்போது ஜெபம் பற்றியும், கர்த்தரிடம் விண்ணப்பம் செய்வது பற்றியும், நம்முடைய ஜெபங்களைக் கேட்டு பதிலளிப்பதாக அவர் தந்திருக்கும் உத்திரவாதம் பற்றியும் பேசுகின்ற சில வேத வசனங்களை நாம் பார்க்கலாம். கிறிஸ்து தம்முடைய நாட்களில் வாழ்ந்த சீடர்களிடம் இப்படிச் சொன்னார். " *நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்* " (யோவான் 14:13, 14). மறுபடியும் இயேசு, " *நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும், நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்* " (யோவான் 15: 7,8) என்று சொன்னார்.

மலைப்பிரசங்கத்தின் போது இயேசு, " *கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்;*

*தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்"* என்றார் (மத். 7:7,8)

அப்போஸ்தலனாகிய யோவான், *" நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்"* (I யோவான் 5:14,15) என எழுதியுள்ளார்.

முதலாவது, ஒருவருடைய ஜெபத்திற்கு பதில் கிடைக்க வேண்டுமானால் அவர் கிறிஸ்தவனாக, தேவனுடைய பிள்ளையாக இருக்க வேண்டும் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன. *" பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பதில்லையென்று யோவான் 9:31-ல் நாம் வாசிக்கிறோம்.* பாவிக்கு தேவன் ஏன் செவி கொடுக்கமாட்டார்? பாவத்தின் காரணமாக தேவனுக்கும், அவரிடத்தில் ஜெபிக்க முயற்சிக்கும் தனிப்பட்ட நபருக்கும் இடையில் பாவம் வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பு தீர்க்கதரிசி இப்படியாகச் சொன்னார். *" இதோ, இரட்சிக்கக் கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது"* (ஏசாயா 59:12). மறுபடியும், ஒரு பாவி, தான் தேவனுடைய பிள்ளையாக இல்லாத போது, அந்த தேவன் தன்னுடைய தகப்பனாக இல்லாத போது எப்படி தேவனை அணுக முடியும்? ஒரு பாவி தேவனிடத்தில் ஜெபித்து, தேவன் தன் ஜெபத்தைக் கேட்டு அதற்கு பதிலளிப்பார் என எதிர்பார்த்தால், ஒரு கிறிஸ்தவனுக்கு, கிறிஸ்தவனல்லாதவனை விட என்ன மேன்மை இருக்கும்? தேவனிடத்தில் ஜெபிப்பது என்று வரும் போதும், தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு பதிலளிப்பார் என்று நம்பிக்கை கொள்ளும்போதும், சிலர் நினைப்பதற்கு மாறாக, ஒருவன் கிறிஸ்தவனாக இல்லாமல் இருப்பதற்கும், ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதற்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது.

இரண்டாவது, ஒரு தேவனுடைய பிள்ளையின் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமானால், அவன் நீதியுள்ளவனாகவும், உண்மையுள்ளவனாகவும் இருக்கவேண்டுமென்று தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. பேதுரு தன்னுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு இப்படி எழுதினார். *"கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது"* (1பேதுரு 3:12). ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்தாலோ அல்லது தேவனை விட்டு வழி தப்பிப் போனாலோ அவன் மனந்திரும்ப, தன் தவறுகளை அறிக்கையிட்டு, அவன் மன்னிப்பைப் பெறும்படி கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். யாக்கோபு இப்படிச் சொல்கிறார். *"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது"* (யாக். 5:16).

மூன்றாவது, அவரைப் பின்பற்றுபவர்கள் தங்களுடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு வெறுமனே அவரிடத்தில் வேண்டிக்கொண்டால் போதுமானதாயிருந்தது என்பது போல் தெரியும். ஆனால், வசனங்களைக் கவனித்தால், அந்த வசனங்களில் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருப் பதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ, கர்த்தர் அதற்கான குறிப் பிட்ட நிபந்தனைகளைத் தந்துள்ளதைக் காணலாம். உதாரணத்திற்கு, கிறிஸ்து, " *என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்* " என்று யோவான் 14:14-ல் சொன்னார். ஆனால், அடுத்த வசனத்திலேயே கிறிஸ்து, " *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்* " என்று சொன்னார். தேவனுடைய பிள்ளை தேவனிடத்தில் எதை வேண்டிக்கொண்டாலும் கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து கற்பனைகளை கைக்கொள்ளவில்லையென்றால், கர்த்தர் எதையாவது கொடுப்பார் என் கற்பனை செய்து பார்க்க முடியுமா? யோவான் 15:7-ல் இயேசு இப்படியாகச் சொன்னார். " *நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வ தெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்* " என்று.

ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திருந்து, கர்த்தருடைய வார்த்தை அவருக்குள் நிலைத்திருந்தால், அந்த நபர் எப்படிப்பட்டவராயிருப்பார்? நிச்சயமாக அப்படிப்பட்டவர் ஓர் உண்மையுள்ள தேவனுடைய பிள்ளை யாயிருப்பார். ஆனால், ஒருவர் கர்த்தருக்குள் நிலைத்திராமல், கர்த்தரு டைய வார்த்தை அவருக்குள் நிலைத்திராமல் இருந்தால், அந்த நபருடைய வேண்டுதலுக்கு கர்த்தர் பதில் கொடுப்பாரா? நிச்சயமாகக் கொடுக்க மாட்டார்.

யோவான் 15:16-ல் இயேசு, " *நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்* " என்று சொன்னார். ஆனால், இந்த வசனத்தின் முதல் பகுதியில், இயேசுதான் அவர்களைத் தெரிந்து கொண்டு அவர்கள் கனிகொடுக்கும்படிக்கு அவர் களை ஏற்படுத்தியதாகச் சொன்னார். இங்கே இயேசு அப்போஸ்தலர் களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர்கள் கனி கொடுக்காமல் இருந்திருந்தால் கர்த்தர் அவர்களுடைய வேண்டுதல்களுக்கு பதில் கொடுத் திருப்பார் என உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? மறுபடியும் கிறிஸ்து, ஒருவன் கேட்டால் அவன் பெற்றுக் கொள்வான் என்று வாக்குத் தத்தம் செய்தார் (மத். 7:7,8). கிறிஸ்து தொடர்ந்து இப்படிச் சொல்கிறார். " *உங்களில் எந்த மனுஷனாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிற வர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?* " (மத். 7:9-11). இந்த வசனங்களின்படி, இங்கே கிறிஸ்து, உண்மையுள்ள பிள்ளைகளாயிருந்து, தகப்பன், மகன் உறவிலிருக்கிற சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். வேத வசனங்களை நீங்கள் படிக்கும்போது, கர்த்தரு டைய ஆசீர்வாதங்கள் அவருக்குக் கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களுக்கும், அவருக்கு உண்மையாயிருப்பவர்களுக்கு மட்டும் தான் என்பதை

எப்பொழுதும் நீங்கள் கவனிக்க முடியும். கீழ்ப்படியாதவர்களை, கலகக்காரர் களை அவர் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

இறுதியாக, I யோவான் *5:14,15* வசனங்களில், நம் ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படி இருந்தால், அவைகளைக் கேட்டு தேவன் பதிலளிப்பார் என்று யோவான் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிள்ளைகளை நேசிக்கிற ஒரு தகப்பன், பிள்ளைகளுக்கு தீங்கு இழைக்கிற அல்லது அவர் களை அழிக்கக் கூடியவைகளை அவர்களுக்கு கொடுக்கமாட்டான். எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குத் தீங்கு செய்கிறவைகளை அவர்கள் கேட்டாலும் கொடுக்கமாட்டான். நம்முடைய பரம பிதாவின் காரியத்திலும் இது உண்மையாயிருக்கிறது. சில காரியங்கள் நமக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமென்று நாம் நினைப்போம். ஆனால், சர்வ ஞானமுள்ள நம் பிதா அதை வேறுவிதமாகப் பார்ப்பார். இங்கே, ஒரு காரியத்தை நாம் நிச்சயித்துக் கொள்ள முடியும். அது, நம் அன்புள்ள தகப்பன் நமக்கு எது சிறந்ததாயிருக்குமோ அதற்கேற்றபடி பதிலளிப்பார். நாம் உண்மையாகவே கர்த்தரிடம் அன்பு கூர்ந்தால் சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் என்கின்ற பவுலின் வாக்கியம் நம் நினைவில் இருக்க வேண்டும் (ரோமர் *8:28*).

நாம் எப்போதுமே நோக்கிப் பார்ப்பதற்கு நமக்கு ஒரு பிதா இருப்பதால், கிறிஸ்தவர்களாக நாம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக் கிறோம். கிறிஸ்து, மனிதர்கள் எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார் (லூக். *18:1*). நாம் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும் என்று பவுல் சொன்னார் (I தெச. *5:17*). ஆதிக்கிறிஸ்தவர்கள் அப்போஸ்தல ருடைய உபதேசத்திலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என நமக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது (அப். *2:42*). யாக்கோபு ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன் என்று சொல்கிறார் (யாக். *5:13*). தொடர்ந்து யாக்கோபு சொல்லும் போது, நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது என்கிறார் (யாக். *5:16*). வியாதியில் இருப்பவர்களுக்காக நாம் ஜெபிக்கும்போது அற்புதங்கள் மூலம் கிரியை செய்வதாக கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணவில்லை. ஆனால், ஜெபங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தும். தேவன் இயற்கை விதிகள் மூலமாக, மருந்துகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மூலமாக நோயாளியை சுகப்படுத்துவதற்கு கிரியை செய்வார். தேவன் தம்முடைய தீர்மானத்தின்படி காரியங்களை மாற்ற கிரியை செய்யும் வழியையும், விதத்தையும் பெரும்பாலும் நாம் குறைத்து மதிப்பிட்டு வருகிறோம். சில வேளைகளில், நாம் தேவன் தம்முடைய வல்லமையைக் காட்டுவதற்கான ஒரே வழி அல்லது தேவனால் ஏதோ ஒன்றை செய்ய முடியும் என்று காட்டு வதற்கான ஒரே வழி அற்புதம் தான் என்று நினைக்கிறோம். ஆனால், அது அப்படியல்ல. நம்முடைய விசுவாசம் எங்கே? மேலும் பிணியாளிக்குத்தான் வைத்தியன் தேவை என்று இயேசு சொன்னார், அதே வேளையில் நாம் நம் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பார்க்கக்கூடாது (மத். *9:12*; மத். *4:7*).

நிச்சயமாகவே, நம்முடைய ஜெபங்கள் பிதாவினால் கேட்கப்பட வேண்டுமென்றால், நமக்காக பரிந்து பேசுகிறவரும், மத்தியஸ்தரும், பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் ஜெபிக்க வேண்டும் (I யோவான் *2:1*; I தீமோ. *2:5*; எபி. *3:1*).

பெண்கள் பகுதி

# மணமுறிவை மனதிலும் நினைக்க வேண்டாம்

**Sis. RACHEAL NAYAGAM**

பொதுவாகவே சினிமா, தொலைக்காட்சி போன்றவைகள் தேவனுடைய திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சிக்கும் சாத்தானின் வல்லமையான ஏவுகணைகள். அதிலும், மேலை நாட்டு சினிமாக்களும், தொலைக்காட்சிகளும் இந்த நாசவேலையில் முன்னணில் நிற்கின்றன. தேவனால் வரையறுக்கப்பட்ட திருமணத்தின் சீரிய நோக்கங்களை உடைத்து உருக்குலைத்து, கண்டதும் காதல், ஒத்துப்போகிற வரைக்கும் இல்லற வாழ்க்கை. முடியாவிட்டால் இருக்கவே இருக்கிறது விவாகரத்து என்ற இழிநிலைக்கு இளம் வட்டங்களை உசுப்பிவிட்டுத் தாறுமாறான இல்லற சுகங்களை ஊக்குவிக்கின்றன. சட்டதிட்டங்களுக்குக் கட்டுபட்டு வாழ்வது கோழைத்தனம் என்ற எண்ணம் விஷவாயுவு பரவுவதுபோல பரவி இளைஞர்களின் உள்ளங்களை பாழ்படுத்தி வருகிறது. திருமணம் சம்பந்தப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள், தேவ ஆலோசனைகளை மீறிப் போர்க்கொடி உயர்த்தும் இளசுகளை வாலிப உலகம் வாழ்த்தி வணங்குகின்றன.

ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள் தம்முடைய வாழ்க்கையில் முக்கியமான நிகழ்ச்சி என்று கருதப்படும் இப்புனிதமான திருமணம் போன்ற காரியங்களில் தேவனுடைய ஆலோசனை என்ன என்று தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். ஆதியிலே மனுஷனை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும், தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இப்படியிருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்ற திருமணத்தின் உயர்ந்த நோக்கத்தை விவரிக்கிறார் *(மத். 19:4,6)* மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களுக்கும் தேவ ஆலோசனையே மிகச் சிறந்தது. ஆகையால், திருமணத்தை ஒருவரும் அற்பமாக எண்ணி யோசனையின்றிச் செய்யாமல் கருத்தோடும், ஜெபத்தோடும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். அதற்கப்புறம் திருமணத்தில் இணைக்கப்பட்ட ஒரு ஆணும் பெண்ணும் தங்கள் பெற்றோர்களிடமிருந்து பிரிந்து இருவரும் சிந்தனையிலும், செயலிலும், ஒருமனப்படுவதற்கு முயல வேண்டும். ஏனெனில், அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

ஒவ்வொருவனும் தன் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல் பிறருடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன் (கொரி. 18:24) என்று கூறப்பட்டிருப்பதின்

பொருளை உணர்ந்து கணவன் மனைவிக்குள் ஏற்படும் சிறு சிறு மனஸ்தாபங்களைப் பொருட்படுத் தாமல் ஒரு வரையொருவர் அனு சரித்துச் செல்லப் பழகிக் கொள்ள வேண்டும்.

ஆனால், நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? எந்த ஒரு தேவனு டைய திட்டத்தையும் மக்கள் அப்படி யே ஏற்றுக்கொள்வது கிடையாது. தாயையும், தகப்பனையும் விட்டு மனைவியோடு இசைந்திருக்கக் கடவன் என்று தேவ ஆலோசனை தெளிவாக இருந்தும் சில ஆடவர்கள் பெற்றோர்களு டைய நிழலிலேயே தாபரிக்க விரும்புகிறார்கள். வேறு சிலர் தனி யாகப் போய் நாம் சமாளிக்க முடியாது என்று பயந்து கொண்டு தாயாரின் முந்தாணையைப் பிடித் துக் கொண்டே நடக்க விரும்புகிறார்கள். இந்தக் கூட்டுக் குடும்ப முறை சில குடும்பங்களில் வெற்றி நடைபோடும். பல குடும்பங்களுக்குச் சரிப்பட்டு வருவதில்லை. ஆரம்பத்தில் லேசாகப் புகைந்து மோதல் ஏற்பட்டு பிரச்ச னைகள் முற்றி சண்டையிலும், சச்சரவு களிலும் போய் நிற்கும். பரஸ்பரம் ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டு கள் தொடரும். இப்படிப்பட்ட கட்டங் களில் பெரும்பாலும் பாதிக்கப்படு வது புதியதாய்க் குடும்பத்தில் வந்த மருமகள் தான், சம்பந்தப்பட்ட அனைவரும் தாங்கள் இந்த விவகாரங் களில் என்ன செய்திருக்க வேண்டும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒருவேளை தேவனுடைய ஆலோச னையை நாம் புறக்கணித்து விட்ட தால் ஏற்பட்ட கோளாறு என்றெல் லாம் சிந்திக்காமல் சோதனைகள் வந்து வேதனைகள் பெருகும் போது மனம் வெறுத்து தான் தேவனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாக கொடுத்த வாக்குறுதிகளை மறந்துவிட்டு, போதும் திருமண வாழ்க்கையின் சுகம் என்று விரக்தியடைந்து விவாகரத்து பற்றிய சிந்தனையில் மூழ்குவது கிறிஸ்தவப் பிள்ளைகளுக்கு ஏற்றதல்ல.

இரண்டு வெவ்வேறு சூழ் நிலைகளில் வளர்ந்த ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஒரே மாம்சமாக இணைந்து போவது கடினம், கொஞ்சம் நாள் பிடிக்கும் என்று தேவனும் அறிவார். இருப்பினும் வேசித்தன முகாந்தரம் தவிர மற்ற எந்தக் காரணத்திற்காகவும் மண முறிவு பற்றி சிந்திக்கக்கூடாது என்று ஆலோசனை கூறியிருக்கிறார் (மத். *19:3,9*) மண முறிவினால் தேவன் ஏற்படுத்திய முதல் அமைப்பாகிய குடும்பத்துக்கு ஏற்படும் இழப்பு களையும், துன்பங்களையும், சற்றே எண்ணிப் பாருங்கள். முதல் இணைப் பினால் பிறந்த குழந்தைகளின் நலம் பாதிக்கப்படும், பெண்மைக்குப் பெருமை தரும் கற்பு நெறி காயலான் கடைச் சரக்காகிவிடும். ஒழுக்க நெறி சிந்தையும்; குற்றங்கள் பெருகும் பாலியல் நோய்கள் பற்றும், இப்படி எத்தனையோ பிரச்சனைகள் உருவாகும்.

சொல்லப்போனால் குடும்பத் திற்குள் ஏற்படும் சண்டை சச்சரவு களுக்கு திருமண முறிவு ஒரு தீர்வே அல்ல. மாறாக, அது அதிகமான பிரச்சனைகளை உருவாக்கும் என்றால் மிகையாகாது. விவாகரத்து சமுதாயம் என்ற மாளிகையின் அஸ்திபாரமாகிய குடும்பம் என்னும், கட்டுக்கோப் பைக் குலைத்துப் போடுவதின் மூலம் அதன் மேல் கட்டப்பட்டுள்ள சமுதாய அமைப்புக்கு பெரும் தீமைகளை விளைவிக்கும், ஆகையால், வாழ்க்கை யில் பிரச்சனைகள் வரும் போது அவைகளை ஞானமாகச் சமாளிப்ப தற்கு முற்பட வேண்டுமேயல்லாமல் மணமுறிவு என்பதை மனதிலும் நினைக்கக் கூடாது. அதைவிட கொஞ்சம் விட்டுக்கொடுத்து வாழ்ந்து சம்பந்தப் பட்டவர்களுடைய அன்பைப் பெற முயற்சிக்கலாமே.

கணவன்மார்கள் முரடர்களாகவும், மனைவி மக்களின் நலனில் அக்கறையில்லாதவர்களாகவும், தன் நலமுள்ளவர்களாகவும் நடந்து கொள்பவராகக் கூட இருக்கலாம். அதற்குச் சவால் விடுகிற பாணியில் மனைவிமார்களும் நடந்து கொண்டால் குடும்பம் சிதையும். நஷ்டம் பெரும்பாலும் பலவீனமான பாத்திரமாகிய தாய்க்குலத்துக்கே. கத்தி சுரைக்காய் மேல் விழுந்தாலும் பாதிக்கப்படுவது சுரைக்காய் தானே. அதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள், உங்களை சபிப்பவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெயம் பண்ணுங்கள். என்று கற்பித்திருக்கிறபடி செய்து பார்க்க முயலலாமே (மத். 5:44) உங்கள் பொறுமையும், சகிப்புத் தன்மையும், உங்கள் ஜெபமும் என்றாவது ஒரு நாள் அவர் உள்ளத்தை உடைத்து உங்கள் மேல் அன்பு செலுத்த வழிகோலுமே. முயன்று பாருங்கள்.

இந்த பிரச்சனைகள் தவிர்க்கப்படுவதற்கு வருமுன் காத்தல் என்ற தடுப்பு முறையைக் கையாள்வது இன்னும் சிறந்தது. திருமணத்துக்கு முந்தியே சம்பந்தப்படவிருக்கிற குடும்பம், பையன் அல்லது பெண் ஆகியோருடைய பண்புகள் குடும்ப சூழ்நிலைகள் ஆகியவை களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள முற்படுவது பயன்தரும். அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்ற தேவ ஆலோசனையை ஏற்றுக்கொண்டு (2 கொரி. 6:14) அவர்களுடைய விசுவாச நிலையை கூடத் தெரிந்து கொண்டு திருமண ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களில் கொஞ்சம் காலதாமதம் கூட ஆகலாம். ஆனால், மனிதன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல என்று ஆதாமுக்கு ஒரு துணையை ஏற்படுத்தியவர் ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணையும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆணையும் உண்டாக்கியே இருப்பார் என்று நம்பிக்கையோடு பொறுமையாயிருந்தால் கர்த்தர் ஏற்ற காலத்தில் வாய்க்கச் செய்வார்.

## நாளும், நடப்பும்

1. சி.பி.ஐக்கு தன்னாட்சி அதிகாரம் – மத்திய அரசு முடிவு
2. உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை இந்தியாவில் உருவாக்க முடியும் – ஜனாதிபதி
3. அனைவருக்கும் உடல் ஆரோக்கியம் திட்டம் – தமிழக அரசு
4. பெண்களுக்கு பாதுகாப்பான சூழல் – சோனியா காந்தி வலியுறுத்தல்
5. கர்நாடகத்தில் புதிய காங்கிரஸ் முதலமைச்சர் பதவியேற்பு
6. பாகிஸ்தானில் நவாஸ் ஷெரீப் ஆட்சி அமைக்கிறார்

வாலிபர் பகுதி

# பிரியமானவர்களே பின்வாங்குதல் கூடாது

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபக் கண்மணிகளே! உங்களை மறுபடியும் இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பிரியமானவர்களே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியில் ஊழியம் செய்த நாட்களில் நூற்றுக்கணக்கான சீடர்கள் அவருக்கு இருந்திருக்கிறார்கள். லூக். 10:1ல் அவருக்கு எழுபது சீடர்கள் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். இயேசுவின் சீடரில் பலர் அவருடைய உபதேசம் கடினமானது என்று சொல்லி அவருடனே கூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள். அப்பொழுது இயேசு மீதமிருந்த பன்னிருவரையும் நோக்கி " நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? " என்று கேட்டார். இயேசு எத்தனை மனமுடைந்தவராய் இத்தகைய கேள்வியை கேட்டிருக்கக்கூடும் என்று சற்று நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், பிற்காலங்களில் சிலர் விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று எழுதினார். " ஆகிலும் ஆவி யானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் " (1 தீமோ 4:1). அப்போஸ்தலனாகிய யோவான் சிலர் பிரிந்து போய்விட்டதாக எழுதினார். " அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை, நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே எல்லோரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்து போனார்கள் " (1 யோவான் 2:19). இன்னும், " பின்வாங்கிப் போனவர்களைப் பற்றிய உதாரணங்கள் பெயர்களுடன் தரப்பட்டிருக்கிறது: இந்த நல்மனச்சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும், அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்; அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களைச் சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன் " (1 தீமோத். 1:19,20).

நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்று இயேசு கேட்ட இந்தக்காட்சியை சற்று கற்பனை செய்து பாருங்கள். சீடர்கள் இயேசுவோடு பல மாதங்கள் இருந்திருந்தும், ஏன் அவரை விட்டு விலகி பின்வாங்கிப் போனார்கள்? அதே கேள்வி இன்னும் கேட்கப்படுகிறது. கிறிஸ்துவின் சீடர்கள் இன்னும் அவரை விட்டு விலகிச் சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? கிறிஸ்து நமக்குச் செய்திருக்கிறவைகளை எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி அவரை விட்டு விலகிச் செல்ல முடியும்? அவர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6) நாம் அவரை விட்டு விலகிச் சென்றால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்கதாக வேறொரு பலி இல்லை (எபி. 10:26). ஆனாலும், சிலர் அவரை விட்டு பின்வாங்கிப் போகிறார்கள். " பின்வாங்கிப் போனவர்களைப் பற்றி தேவன் சொல்லும் போது ஒருவன் பின்வாங்கிப் போவானானால் அவன்

மேல் என் ஆத்துமா பிரியமாயிராது " என்று சொல்கிறார் (எபி. 10:38). கிறிஸ்து அவர்களுக்கு செய்தவைகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, நன்றி கெட்டவர்களாய் அவரை விட்டு விலகிச் செல்கிறவர்கள் எங்கே செல்கிறார்கள் என்று பார்ப்போம்.

## I. சிலர், மறுபடியும் தங்கள் பாவ வாழ்க்கைக்குச் செல்கிறார்கள்

இயேசு கிறிஸ்து நம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வந்தார். ஆனால், சிலர் அவரை விட்டுவிட்டு மறுபடியும் அந்தப் பாவ வாழ்க்கைக்கே சென்று விடுகிறார்கள். சகோதரரே, "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" என்று எபிரெய ஆசிரியர் பின் வாங்கிப் போகிறவர்களை எச்சரிக்கிறார் (எபி. 3:12). கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதாகமம் சொல்கிறது (எபே. 2:5). ஆனால், சிலரைப் பார்த்து வேதாகமம் கிருபையினின்று விழுந்தீர்கள் என்று சொல்கிறது (கலா. 5:4). எனவே தான், தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் என்று எச்சரிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நாம் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும்.**

அதென்னவென்றால் என்ன ஆனாலும் நாம் அவரையே பின்பற்றுவோம் என்கிற தீர்மானம் தான் அது. அதில் அசையாதவர் களாய் நாம் உறுதியாய் இருக்க வேண்டும். ஏனென்றால் இயேசு இப்படியாகச் சொன்னார். " என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான் " என்று (மத். 12:30). மேலும் 2 கொரி. 5:14,15 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை கவனியுங்கள். கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனி தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவை விட்டு விலகிப் போகிறவர்களைப் பற்றிச் சொல்லும் போது, " அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகு வதைப் பார்க்கிலும், அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்கு சம்பவித்தது " என்று சொல்கிறார் (2 பேதுரு 2:21,22). பாவத்திலிருந்து கழுவப்பட்டு, பின்பு கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து பாவ வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்புவது, கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்பினது போலாகும்.

## II சிலர் உலகத்தின் ஐசுவரியத்தை நாடிச்செல்கிறார்கள் :

ஒருமுறை நம்முடைய அருமை இரட்சகர் ஒரு கேள்வியைக் கேட்டார். அந்த கேள்வி (மத். 16:26)ல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதோ, அந்தக் கேள்வி " மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? " சிலர் நித்திய ஐசுவரியத்தின் வாக்குத்தத்தங்களில் திருப்திப்படாமல் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து, அழிந்து போகின்ற உலகத்தின்

ஐசுவரியத்தை நாடிச்சென்று விடுகிறார்கள். யூதாஸைப் போல் முப்பது வெள்ளிக் காசுக்காக அவர்கள் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறார்கள். பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்; பரலோகத்தில் உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என்று இயேசு சொன்னார் (மத். 6:19,21). ஆனால், சிலர் இவ்வுலகத்தின் ஐசுவரியம், அதிகாரம், கௌரவம், சந்தோஷம் போன்றவைகளுக்காக நம்முடைய அருமை இரட்சகரை விட்டுப் பிரிந்து செல்கிறார்கள்.

## III சிலர் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திற்குள் செல்கிறார்கள்

சாத்தானுடைய மிக வல்லமையான பிரசங்கம் என்னவென்றால் எல்லா சபைகளும் ஒன்று தான் என்பதாகும். கிறிஸ்து ஒருபோதும் அப்படிச் சொன்னதில்லை, அப்படி அவர் ஒருபோதும் போதிக்கவுமில்லை. இயேசு, *நான் என் சபையைக் கட்டுவேன்* என்று சொன்னார் (மத். 16:18) அந்தச் சபையை, அவர் தமது சுய இரத்தத்தினாலே சம்பாதித்தார் (அப். 20:28). சாத்தான் மக்கள் மனதில் எப்படி வேண்டுமானாலும் இரட்சிக்கப்பட முடியும். எல்லா சபைகளும் ஒன்று தான் என்கிற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி இருக்கிறான். இயேசு கட்டின சபையை இந்த உலகத்திலுள்ள எல்லா மார்க்கப் பிரிவினை சபைகளும் சேர்ந்து எதிர்க்கின்றன. எபேசியர் ஐந்தாம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை பவுல் ஒரு கணவனுக்கும், மனைவிக்கும் உள்ள உறவாக வர்ணித்திருக்கிறார். சபையாகிய மணவாட்டியை, மணவாளனாகிய இயேசு விவாகம் செய்திருக்கிறார். எனவே, கிறிஸ்துவுக்கு சபையாகிய ஒரே மணவாட்டி தான் இருக்கிறது.

பிரிவினையே இருக்கக்கூடாது என்று இயேசு ஜெபித்தார்; நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்க வும் வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:20,21)

## IV சிலர் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து நம்பிக்கையற்றுச் செல்கிறார்கள்

கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார் (கொலோ. 1:27) எனவே, கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்பவர்கள் நம்பிக்கையற்றுப் போகிறார்கள் (எபி. 10:26,31) போன்ற வசனங்களில் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்லும் ஒருவரின் நிலை படம் பிடித்துக் காட்டப்படுகிறது. கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்வது, இரட்சிப்பை விட்டுச் செல்வதாகும். கிறிஸ்து இல்லாமல் நாம் பரலோகத்தில் பிரவேசிப்பது கூடாத காரியமாகும். கிறிஸ்துவிலும் அவருடைய இரத்தத்திலும் மட்டுமே நமக்கு நம்பிக்கை இருக்கிறது. கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து செல்வது நித்திய ஜீவனை விட்டுப் பிரிந்து செல்வதாகும். அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம் என்று எழுதுகிறார் (1 யோவான் 5:11). வாலிபக்கண்மணிகளே, இன்றும் இயேசு நம் ஒவ்வொருவரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? என்று கேட்டுக்கொண்டு தான் இருக்கிறார். அந்தக் கேள்விக்கு நீங்கள் எப்படி பதிலளிக்கப் போகிறீர்கள்? நித்தியம் காத்துக் கொண்டிருக்கிறது. சிந்தித்து செயல்படுங்கள்.

சிறுவர் பகுதி

# தைரியம் நிறைந்த மோசேயின் பெற்றோர்

Dr. ABEL R. NAYAGAM

அருமையான சின்னத்தம்பி, தங்கைகளே! சிறுபிள்ளைகளை மிகவும் நேசித்த நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வாழ்த்துகிறேன். இவ்விதழ் மூலமாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இம்முறை, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவனின் துணையுடன் விடுதலை செய்து வழிநடத்திய மோசேயின் சிறுபிராயத்தைக் குறித்து சிறிது சிந்திப்போம் வாருங்கள்!

யோசேப்பின் மரணத்திற்குப் பின் யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்திலே தோன்றினான் (யாத். 1:8). அவன் எபிரெயர்களுக்கு (இஸ்ரவேலர்களுக்கு) நன்மை செய்ய விருப்பமில்லாதவனாக இருந்தான். தன் நாட்டில் அதிகமான எபிரெயர்கள் இருந்ததினால், ராஜாவாகிய பார்வோன், தன் நாட்டை அவர்கள் மேற்கொண்டு விடுவார்களோ என்று பயந்தான். யாத் 12:37ல் 6,00,000 எபிரெய புருஷர்கள் (பெண்களையும், சிறியவர்களையும் சேர்க்காமல்) இருந்தார்கள் என்று கூறுகிறது. ஆனால், பார்வோனோ அவர்கள் எல்லோரும் தனக்கு அடிமைகளாக வேண்டும் என்று தீர்மானித்தான். பின்னர், அவர்களாகவே செங்கற்களைச் செய்து முழு பட்டணத்தையும் கட்டும்படி அவர்கள் மீது விசாரணைக்காரரர்களை ஏற்படுத்தினான்.

எபிரெயர்களை, அதிகம் துன்புறுத்தி, கடும் வேலைகளை கொடுத்ததால் அவர்களுக்கு குறைந்த குழந்தைகளே இருப்பார்கள், அப்படி இருப்பவர்களும் எளிதாக இறப்பார்கள் என எகிப்தியர்கள் நினைத்தார்கள். ஆனால், இன்னும் அதிக எபிரெய குழந்தைகள் பிறந்து கொண்டு தான் இருந்தது.

அடுத்ததாக, பார்வோன் மருத்துவச்சிகளுக்கு, புதிதாக பிறக்கும் எல்லா எபிரெய ஆண்பிள்ளைகளைகொல்ல உத்தரவிட்டான். ஆனால், மருத்துவச்சிகள் பார்வோனின் வார்த்தைகளை கேட்கவில்லை. ஏனென்றால், ஒன்றும் அறியாத அக்குழந்தைகளை கொல்வது தவறு என்று அறிந்திருந்தனர். பார்வோன், இக்காரியத்தை அறிந்த பொழுது எல்லா எபிரெய ஆண் பிள்ளைகளையும் நைல் நதியில் வீசி எறியுமாறு எகிப்து மக்களுக்கு கட்டளை இட்டான்.

இப்படிப்பட்ட காலத்தில், யோசபாத், அம்ராம் என்ற பேருள்ள எபிரெய தம்பதியினர் தங்கள் குழந்தையை கொல்லுவதிலிருந்து தப்ப அவர்கள் முயற்சித்தார்கள். அவர்களுக்கு ஏற்கனவே 14 வயதான பெண் பிள்ளையும் (மிரியாம்) மற்றும் ஒரு மகனும் (3 வயதான ஆரோன்) இருந்தார்கள். ஆனாலும், இக்குழந்தை அவர்களுக்கு விசேஷமான ஒன்றாக இருந்தது. அதினால் அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என உணர்ந்தார்கள். மூன்று மாதம் வரை, அந்த சிறு பையனை அவர்கள் மறைத்து வைத்தார்கள், ஆனால், அதற்கு மேல் அவர்கள் வேறு காரியம் செய்ய வேண்டும் என அறிந்தார்கள்.

அவர்கள் ஒரு கூடையை உண்டுபண்ணி, அதன் மூடியை பாப்பிரஸ் செடியின் குச்சிகளை கொண்டு செய்து, பிசினும், கீலும் பூசி, அதை தண்ணீர் புகாமல் செய் தார்கள். அதில் அச்சிறுவனை வைத்து ஆற்றின் பெரிய செடிகளுக்கு இடையே மறைந்து வைத்தார்கள். அச்சிறுவன் அக்காவான மிரியாம் தூரத்திலே நின்று அக்கூடையை பார்த்து எந்தவித மோசமானதும் ஏற்படாமல் இருக்க கண்காணிக்கும் வேலையைப் பார்த்தாள்.

வேதாகமம், எவ்வளவு காலம் மறைத்து வைத்தார்கள் என்று நமக்கு குறிப்பிடவில்லை. ஆனால், ஒரு நாளில் எகிப்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் அதை கண்டாளென்று கூறுகிறது. அப்பெண்மணி பார் வோனின் மகள் தான். இளவரசி குளிக்க தன் வேலைக்காரிகளோடே நதிக்குச் சென்றாள். அந்தக் கூடையை கண்டவுடன் ஒரு வேலைக்காரியை போய் எடுத்துவரச் சொன்னாள். அவள் அக்கூடையின் மூடியை திறந்த வுடன் அக்குழந்தையைக் கண்டு அது ஒரு எபிரெய குழந்தை என்றுணர்ந்து அக்குழந்தையைக் காப்பாற்ற அதை சொந்தக் குழந்தையைப் போல் ஏற்றுக் கொண்டாள். மிரியாம் இவை நடந்த தைக் காணக்கூடிய தூரத்திலே இருந் தாள், ஆகையால் என்ன நடந்தது என்பதையும் கண்டாள்.

அவள் (மிரியாம்) இளவரசி யிடம் சென்று அவளை நோக்கி, இக் குழந்தையை பராமரிக்க, அவளுக்கு தெரிந்த ஒரு பெண் இருக்கிறாள் என்றாள். அப்பெண்மணியாக மோசேயின் அம்மாவான யோச பாத்தை அழைத்து வந்தாள். இளவரசி அதற்கு ஒத்துக் கொண்டாள். யோசபாத் ஒரு எபிரெய அடிமைப் பெண், அவளது மகனையே பார்த்துக் கொள்ள முடிந்தது. இளவரசி அவனுக்கு மோசே என்று பேரிட்டாள். மோசே என்பதற்கு ஜலத்திலிருந்து எடுக்கப் பட்டவன் என்று அர்த்தம். சிறிது காலம் சென்ற பின்பு (ஏறக் குறைய 7 வயதுக்கு முன்னால்) யோசபாத்தன் மகனாகிய மோசேயை அரண்மனையிலுள்ள பார்வோனின் மகளிடம் எடுத்துச் சென்றாள். அந்த நேரத்திலிருந்து, இளவரசி மோசேயை உலகின் பெரிய சாம்ராஜ்யத்தின் அரசனுடைய பேரன் என்ற நிலைக்கு உயர்த்தினாள்.

யோசபாத்தும் அம்ராமும் அவர்கள் குழந்தைகளுக்கு எந்தவித பொருளையோ அல்லது படிப்பறி வையோ பெற்றுத்தர அவர்களால் முடியாதிருந்தது. ஆனால், அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்தார்கள்; உண்மையான ஒரே தேவன் மீதும், அவர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் மீதும் விசுவா சத்தை வளர்த்தார்கள். மோசே அன்றைய நாட்களில் எகிப்தின் உயர்ந்த கல்வியைப் பெற்றிருந்த போதிலும் (அப். 7:22), அவன் தன் பெற்றோர்கள் தேவனைப் பற்றிக் கற்றுத்தந்த முந்திய போதனையை நினைவு கூர்ந்து, வார்த்தையிலும், செயலிலும் வல்லவனானான். அவன் 40 வயதாகும் போது எகிப்தின் எல்லாச் சுகங்களையும் விட்டுவிட்டு, விடுதலை பெற்ற லட்சக்கணக்கானவர்களை வழிநடத்தினான்.

இந்த மாற்றத்தை உண்டாக் கிய எது அவன் இளவயதாயிருக்கும் போது அவன் பெற்றோர் கொடுத்த சுயநலமற்ற அன்பும் போத னையுமே. மோசே இந்த போதனைக்கு திரும்பின போது, அவன் தேவனையும், தன் பெற் றோரையும் கனம் செய்து, தன்னால் கூடுமான மட்டும், ஒரு நல்ல தலைவ னாகயிருந்தான். மோசேயின் பெற் றோரைக் குறித்து நமக்கு வேறொன் றும் தெரியவில்லை என்றாலும் தேவன் மீதான அவர்களது அன்பும், விசுவாச மும் தங்களது மகனின் மகத்தான வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து வந்தது.

# " நல்ல உக்கிராணக்காரனாக இருங்கள் "

Bro. V. தானியேல் துரைராஜன்

" மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் " *(1 கொரி. 4:2).*

**I. ஒரு உண்மையுள்ள வேலைக்காரனாக இருங்கள் :** (Be a Faithful Worker)

தேவன் மனிதனை சிருஷ்டித்த பொழுது வேலை செய்தல் என்பது அவனுடைய அன்றாட பொறுப்பு நிறைந்த வாழ்வின் ஒரு குறிப்பிடும் படியான அம்சமாக இருந்தது. ஆதியாகமம் புத்தகத்தில் ஆதாமை உண்டாக்கி ஏதேன் தோட்டத்தில் வைத்தபொழுது, தேவன் அதை பண் படுத்தவும், பாதுகாக்கவுமே வைத்தார் *(ஆதி. 2:15).* ஆதாமுடைய ஆளுகை பூமியில் வேலை செய்தலோடு துவங்குகிறது. மாறாக, தேவன் ஒரு கயிற்று கட்டிலைப் போட்டு நீ இதில் படுத்து ஓய்வெடுத்துக்கொள் என்று சொல்ல வில்லை.

வேதாகம ஒழுக்க நெறிக் கோட்பாடுகளிலே ஒன்று வேலை செய்தல். கிறிஸ்தவனுடைய சுவிசேஷத்தின் வல்லமையானது அவனுடைய அல்லது அவளுடைய வேலை செய்யும் சிந்தையோடு பரிசோதித்துப் பார்க்கப்படுகிறது (எபேசி. *6:5)* என்ன சொல்லுகிறது. " வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும், நடுக்கத்தோடும் கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள் ".

உன் எஜமானனுக்கு கடினமாக உழைத்தல் என்பது ஆண்டவருக்கு கடினமாக உழைத்தலாகும். சுவிசேஷத்தினை எதிர்க்கும் இந்த உலகம் கூட கடினமாக உழைப்பவர்களை வரவேற்கும், ஒருவேளை உன்னுடைய எஜமானன் உன்னுடைய விசுவாசத்தை துவக்கத்தில் மதிக்காதவராக இருந்தாலும், உன்னுடைய கடின உழைப்பினை கண்டிப்பாக மதிப்பவராக இருப்பார். இதன் விளைவாக உன்னுடைய சுவிசேஷத்தை அறிவிக்கும் வாய்ப்பு உனக்கு நீ வேலை பார்க்குமிடத்தில் பிரகாசமாகக் காணப்படும்.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஒருவன் ஆஸ்தியை எப்படி சம்பாதித்துக் கொள்ள முடியுமென்று அநேக வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. *நீதி. 14:23ல்* " சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு; உதடுகளின் பேச்சோ வறுமையை மாத்திரம் தரும் ". மீண்டுமாக, *நீதி. 28:19,20* "தன் நிலத்தை பயிரிடுகிறவன் ஆகாரத்தால் திருப்தியாவான் வீணரைப் பின்பற்றுகிறவனோ வறுமையால் நிறைந்திருப்பான் " என்று சொல்லியிருக்கிறது.

ஒரு பழங்காலக் கூற்று " புத்தியாய் வேலை செய்! கடினமாய் செய் யாதே! என்பது. ஆனால், நம்முடைய இன்றைய கலாச்சாரத்தில் இதுவே இப்படியாக சொல்லப்படுகிறது. "கடினமாகவும், புத்தியாகவும் வேலை செய்! " என்பதாகும்.

பெரும்பாலும் அநேகருக்கு பொருளாதார நெருக்கடிகள் வருவதற்கு என்ன காரணமென்றால், அவர்களுடைய தவறான தெரிவு செய்தல் மட்டு மல்ல, மாறாக, அவர்கள் கூடுமட்டும் கடினமாக உழைக்காமை என்று சொல்லலாம். உழைத்தால் உயர்வு உண்டு.

## II. மிகுந்த ஜாக்கிரதையோடு திட்டமிடுங்கள் (Be a Careful Planner)

ஒரு உண்மையுள்ள வேலைக்காரனாக இருப்பதைப் பார்க்கிலும் ஒரு கிறிஸ்தவன் நன்கு தெளிவாக திட்டமிடுகிறவனாக இருக்க வேண்டும். இதில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைப்பாடும் அவனுக்கு உண்டு. அவை களைப் பார்ப்போம்.

### I. நீங்கள் வாழ்வதற்காக உண்ணுங்கள், உங்களையே உண்பவை களுக்காக வாழாதீர்கள் (Don't be Consumed by Consumption)

இன்றைய நாகரீக உலகில் இந்த பொருட்களை வாங்கி அதை உபயோகித்தல் என்பது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. சில தேசத்தின் பொருளாதாரமே இதை மையப்படுத்தி ஏற்றங்களையும், இறக்கங்களையும் கண்டு வருகிறது. நீங்கள் உபயோகிப்பாளராக இருப்பது தவறல்ல. ஆனால், மதி கேடனான மனிதனைப் பாருங்கள். அவன் தனக்குண்டான எல்லாவற்றையும் செலவழித்துப் போட்டுவிட்டு எதிர்காலத்துக்கு ஒன்றையும் வைக்காமல் போகிறான் (நீதி. *21:20*). எல்லாவற்றையும் செலவழித்து போடுவதற்கு எந்தக் காரணத்தையும், காரணமாக சொல்லமுடியாது. நீ சம்பாதிப்பவைகளுக்கு மேலாக செலவழித்து விட்டு கடன் வாங்கி கடன்காரனாக வாழுதல் தேவனுக்கு விருப்பமல்ல. வேதாகமம் இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழுதலையே வலியுறுத்துகின்றது.

### II. நீங்கள் அடிமைபடுவதற்கேதுவாக கடன்வாங்காதீர்கள் (Don't borrow yourself into bondage)

நீங்கள் ஒருவேளை இந்த பழமொழியை கேட்டிருப்பீர்கள் "கடன் வாங்காதே! கடன் கொடுக்காதே!!." இது வேதாகம வசனமல்ல, மாறாக, இது "சேக்ஸ்பியரின் ஹேம்லெட்" என்ற நாடகத்தில் வரக்கூடிய ஒரு வசனம். ஆனால், கடன்படுவதைப் பற்றி பரிசுத்தவேதாகமத்தில் ஒரு வசனமுண்டு அது (நீதி. *22:7*). "…..கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுகு அடிமை". கடன் வாங்குவதும், அடிமைத்தனமும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்கிறது. நீங்கள் எவ்வளவு அதிகமாக கடன் வாங்குகிறீர்களோ அவ்வளவு அதிகமாக அவர்கள் உங்களுடைய வாழ்க்கையை கட்டுபடுத்துகிறவர்களாக ஆகிவிடுவார்கள்! எவ்வளவு துக்கமான ஒரு காரியம் பாருங்கள்!

பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர்களுடைய வட்டித் தொழிலைப் பற்றி தேவன் பேசுகிறார். குறிப்பாக வட்டி விகிதாச்சாரங்களைப் பற்றி சொல்லுகிறார் (லேவி. *25:36,37*). மேலும் யூதர்கள் ஒருவருக்கொருவர் பணம் கடன் கொடுக் கும்பொழுது அந்த கடன் வட்டியில்லாமல் கொடுத்தல் வேண்டும். ஆனால், புற சாதியாரிடத்தில் வட்டி பெறலாம். ஆனால், சங்கீதக்காரன் 15ம் சங்கீதத்தில் 5ம் வசனத்தில் சொல்லுவது, " யார் தேவனுக்கு முன்பாக வந்து நிற்க கூடுமென் றால், தன் பணத்தை வட்டிக்கு கொடாதவன் " என்கிறார் (எசே. *18:8*)ல் நீதி மானைப் பற்றி சொல்லும் போது தன் பணத்தை ஏழைகளுக்கு வட்டியில்லாமல் கொடுப்பவன் என்கிறார். ஆனால், அந்த யூதமக்களிடம் ஊழல் பெருகிப்போனது அவர்கள் தேவன் சொன்னபடி நடக்கவில்லை. தேவன் உங்களை கண்டிக்கின்றார் (எசேக். *22:12*)ல் பாருங்கள். " இரத்தஞ்சிந்தும்படிக்குப் பரிதானம் வாங்கின வர்கள் உன்னில் இருக்கிறார்கள். நீ வட்டியையும் பொலிசையையும் (அதிகமான வட்டி, மீட்டர் வட்டி, கந்து வட்டி) வாங்கி, பொருளாசையினால் உன் அயலானுக்கு

இடுக்கண் செய்து என்னை மறந்து போனாய் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் ".

வேதாகமம் நியாயமான கடன் வாங்குதலைப் பற்றியும், வரன்முறைக் குட்பட்ட வட்டி கொடுப்பதையும், வாங்குவதையும் தடை செய்வது கிடையாது. அது பெரும்பாலும் அரசு வங்கிகளிலும் சில நிறுவனங்களிலும் உண்டு.

## III. உன் வாழ்வின் வெற்றிக்காக ஆத்துமாவை விற்று போடாதே (நீதி. 28:19,20) (Don't Sell your Soul for Success)

ஒரு தவறான வழியில், மிகவும் கேவலமான தந்திரத்தில் சொத்து சம்பாத்திப்பதை இது கண்டிக்கிறது. தன்னுடைய மனதில் ஒரு தெளிவான திட்டம் கிடையாது. ஆகவே, அவர்கள் பணம் சம்பாதிக்க சூதாட்டம் சீட்டு கம்பெனிகள் நடத்துவது. வலைதள வியாபாரம் என்று அநேகருடைய அறியாமையை பயன்படுத்தி ஏமாற்றுவது (நீதி. *12:11,12*ல் சொல்லப்பட்டிருக்கிறது. " தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் ஆகாரத்தினால் திருப்தியடைவான். வீணரை பின்பற்றுகிறவனே மதியற்றவன் ". " துன்மார்க்கன் துஷ்டருடைய வலையை விரும்புகிறான். நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்". நீதிமொழிகள் புத்தகத்தில் எங்கும் காணப்படுவது. துன்மார்க்கன் தவறான வழிமுறைகளை பின்பற்றி ஆஸ்தி சம்பாதிப்பதைப் பற்றியே பேசுகிறது நீதி. *15:27*ல் பரிதானம் வாங்குவதும் நீதி. *2:10,23* கள்ளத்தராசை பயன்படுத்துவது (நீதி. *23:10*)ல் திக்கற்ற பிள்ளைகளின் வருமானத்தைத் திருடுவது சொல்லப்பட்டிருக்கிறது. (சகரி. *7:10*)ல் கூட விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் வைத்து விடுதிகள் நடத்தி அவர்களுடைய ஆஸ்திகளையும் திருடி சுகபோகமாக வாழ்வது. இப்படிப் பட்டவர்களுக்குரிய தண்டனை கண்டிப்பாக உண்டு. வேதம் எச்சரிக்கிறது

உன்னுடைய பொருளாதார நிலைப்பாடு உன்னுடைய கடின உழைப்பிலும் நீ தெரிவு செய்த வேலையின் முழு அறிவுத் தெளிவிலும் தான் உண்டு நீதி. *24:3,4*ல் வாசிக்கலாம், வீடு ஞானத்தால் (By wisdom) கட்டுப்பட்டு விவேகத்தால் (By understanding) நிலை நிறுத்தப்படும் அறிவினாலே (By knowledge) அறைகளில் அருமையும் இனிமையுமான சகலவிதப் பொருள்களாலும் நிறைந்திருக்கும்.

ஞானம் (wisdom), விவேகம் (Understanding), அறிவு (Knowledge) இவை மூன்றும் இணைந்து செயல்படும் பொழுது ஒரு உறுதியான பொருளாதார கட்டமைப்பை உங்களுக்கு அவைகள் கொடுத்து எந்தவிதமான வியாபாரமாக இருந்தாலும், தொழிலாக இருந்தாலும் வேலை வாய்ப்பாக இருந்தாலும் உன்னை சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்யும் கண்டிப்பாக உயர்த்தும்.

வேதாகமத்தில் எந்த இடத்திலும் ஏமாற்றி, நேர்மையற்ற, உண்மை யில்லாத வழிகளில் ஆஸ்தியை சம்பாதிக்கும் வாக்குத்தத்தம் கிடையாது.

***நிறைவாக :*** அழிந்து போவதற்கான ஆயத்தம் என்பது சாதாரண ஒரு காரியமல்ல. கிறிஸ்தவனுடைய ஒரே நம்பிக்கை தேவன். அழிந்து போகிற ஆஸ்தியல்ல (1 தீமோ. *6:17; 4:10*) வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவர்களுடைய முழுமை யான பாதுகாப்பு தேவனிடத்தில் மட்டுமே இருக்கிறது. ஆஸ்தியிலில்லை. மேலும், நம்முடைய சரீரத்தையும், பொருளாதாரச் சூழ்நிலை களையும் கட்டுபடுத்தும் சர்வ வல்லமை பரலோகத்தின் தேவனிடத்திலிருக் கிறது என்பதைச் சரியாக தெரிந்து கொண்டு தேவனிடத்தில் அதிகமாய் ஆஸ்தியை சேகரித்து வைக்க வேண்டும் (மத். *6:19,21;* லூக். *12:15*).

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜகுமார்

அன்பானவர்களே! சென்ற மாதத்தில் நியாயப்பிரமாணத்தின்படி (பழைய ஏற்பாட்டின்படி) மாம்ச சம்பந்தமான மனித ஆசாரியத்துவத்தைப் பற்றியும் அதன் பெலவீனங்கள் குறித்தும் பார்த்த பிறகு தேவன் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக ஏற்படுத்தின புதிய ஏற்பாட்டு பரிபூரண தெய்வீகமான ஆசாரியத்துவம் பற்றியும் கவனித்தோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து பரலோகம் சென்ற பிறகு வந்த பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட அவருடைய சபைக்கு, ஆவிக்குரிய சபைக்கு இயேசு கிறிஸ்து ஒருவரே பிரதான ஆசாரியராயிருக்கிறார். எருசலேமில் உண்டான அந்த சபைக்கு மட்டுமல்ல கிறிஸ்துவின் சுவிசேஷம் உபதேசம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்பட்டு பிராந்திய சபைகள் உருவானதோ அந்த எல்லா சபைக்கும் கிறிஸ்து ஒருவரே பிரதான ஆசாரியராயிருக்கிறார் (எபி. *7:16;17;3:1*).

முதலாவது, சபை என்கிற அமைப்பைக் குறித்து நாம் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே அவருடைய ஒரே ஒரு சபையைக் கட்டினார். (வெளி. *1:6*; அப். *20:28*; கொலோ. *1:20,21*) ஆகையால், சபை என்பது கிறிஸ்துவின் சொத்துதான், வேறொருவருடைய சொத்தாக முடியாது. சபை கிறிஸ்துவின் சொத்தானால் அதில் (சபையில்) அவருடைய புதிய ஏற்பாட்டு சத்தியம் மட்டும் போதிக்கப்பட முடியும். வேறு உபதேசம் போதித்தால் அது கிறிஸ்துவினுடைய சபையாக இருக்க முடியாது. இந்த சபையென்கிற அமைப்பிலே யாரெல்லாம் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்றால்; சபையிலே முதல் நபராக கிறிஸ்து இருக்கிறார். கிறிஸ்துவையே மூலைக் கல்லாக அல்லது முதல் கல்லாக, அதாவது ஆத்துமாவாக தேவன் ஏற்படுத்தினார். (மத். *21:42*; அப். *4:11*; 1 கொரி. *3:11*; எபே. *2:20,21*). சபையை தேவனுடைய ஆலயமாக விவரித்து அந்த ஆலயத்திலும் முதல் கல் (ஆத்துமா) கிறிஸ்து தான் என்பதை பரிசுத்த ஆவியானவர் விவரிக்கிறார்.


எச்சரிக்கை : பழைய ஏற்பாட்டிலும் சரி, புதிய ஏற்பாட்டிலும் சரி சரி சபை என்பது ஒரு கட்டிடத்திற்கு சம்பந்தமாக பேசப்படவில்லை (2 நாளா *6:3,12*; யாத். *16:1*; *17:1*; அப். *7:38*) அதற்கு பதிலாக மக்கள் தான் சபை என்பது தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதற்கு அநேக வேத வசனங்கள் வேதாகமத்தில் உள்ளன. ஆனால், தேவாலயம் என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்திலே கட்டிடமாகவும், புதிய ஏற்பாட்டு காலமாகிய இந்த காலத்திலே சபையாகிய மக்களை குறிக்கிறதாயுமிருக்கிறது (1கொரி. *3:16*). நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய

ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? இந்த வசனத்தின்படி இரட்சிக்கப்பட்ட மக்களே ஆலயமாக மாளிகையாக இருக்கிறார்கள் அல்லது இருக்கிறோம். கிறிஸ்து அதற்கு மூலைக்கல்லாயிருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் உண்மையிலேயே ஒரு பூமிக்குரிய கல் அல்ல. அதேபோல அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் அஸ்திபாரமாகியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்களும் முதலாம் நூற்றாண்டு தீர்க்கதரிசிகள் கற்களோ சிமெண்டோ அல்லது கம்பிகளோ அல்ல, அவர்கள் ஜீவனுள்ள ஆத்துமாக்கள். இந்த புதிய ஏற்பாட்டின் காலத்திலே கிறிஸ்துதான் தேவனுடைய ஆலயத்தில் முதல் கல்லாய் அதாவது ஆத்துமாவாய் அல்லது நபராய் இருக்கிறார். அதன்பிறகு அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள். அவர்களோடு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களை தேவன் (கர்த்தர்) சேர்த்துக் கட்டிக் கொண்டு வருகிறார். இப்படியாக இப்பொழுது அந்த பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

| நிழல் | நிஜம் |
|---|---|
| முதலில் கூடாரம், பிறகு சாலமோன் இராஜாவால் கட்டப்பட்ட தேவாலயம். | கிறிஸ்துவானவர் மூலைக்கல். அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள். அவர்களைத் தொடர்ந்து அவர்கள் மேல் நாம் கட்டப்படுகிறோம். |
| நேபுகாத்நேச்சார் ராஜா இடித்து விட்டார். மீண்டும் யூதர்கள் கி.மு. 6ம் நூற்றாண்டிலே கட்டினார்கள். இது பூமிக்குரிய கட்டிட தேவாலயம் | இது தேவனாலே கட்டப்படும் ஆவிக்குரிய தேவாலயம் |

கிறிஸ்துவின் சபையாக தேவனுடைய ஆலயமாக இருக்கக்கூடிய நாம் நம்மைப் பற்றி சில நேரங்களில் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளுகிறோம். ஆனால், நாம் யார் நாம் எங்கு இருக்கிறோம். எப்படிப்பட்ட கூட்டத்தில் ஒருவராக இருக்கிறோம் என்று உணர்ந்து கொண்டால் நம்மைக் குறித்து நமக்கே ஒரு பெரிய மதிப்பு உண்டாகும். நாம் உலகத்தாரைப் பார்க்கும் போது அவர்கள் பெரிய கூட்டமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறோம். பிரிவினைச் சபை மக்களைப் பார்க்கும் போது ஏராளமான மக்களாயிருக்கிறார்கள் என்கிற பிரமிப்பு நமக்கு உண்டாகிறது. இது இயற்கையே. ஆனால், உண்மையான கூட்டம் எது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. நாம் ஏதோ ஒரு பட்டணத்தின் ஒரு பகுதியில் அல்லது ஒரு கிராமத்தில் *10* பேரோ அல்லது *20* பேரோ அல்லது *50, 100* அல்லது *200* பேரோ சபையாக இருக்கிறோம். சிறிய கூட்டமாக இருக்கிறோமே என்று எண்ணுகிறோம். அமெரிக்க ஐக்கிய தேசத்தில் *1000* அல்லது *1500* பேர் கூடி வரக்கூடிய பிராந்திய சபைகளும் இருக்கிறார்கள். கூட்டம் எவ்வளவு பெரியது அல்லது சிறியது என்பதை விட நாம் கிறிஸ்துவின் உபதேசத்தில் இருக்கும்போது எங்கெல்லாம் நம்முடைய ஐக்கியம் உள்ளது என்பதுதான் முக்கியமாயிருக்கிறது. இதற்காக நாம் எபேசியர் *3:14*ஐ விளக்க வேண்டும். அந்த வசனத்தில் ....பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழு குடும்பத்துக்கும் நாமகரணராகிய என்று சொல்லப்பட்டுள்ளது. தேவனுடைய சபை

(கிறிஸ்துவின் சபை) அல்லது தேவனுடைய ஆலயம் அல்லது தேவனுடைய குடும்பம் என்பது ஒரே ஒரு கிராமத்தோடு அல்லது ஏதோ ஒரு பட்டணத்தின் ஒரு மூலையோடு முடிந்து விடுவது அல்ல. இந்த வசனத்தில் இரண்டு லோகங்கள் (உலகங்கள்) சொல்லப்பட்டுள்ளது. அவை பரலோகம் இன்னொன்று பூலோகம். நாம் சற்று தைரியமாகவே இந்த பூலோகம் என்பதை இரண்டு பாகமாக பார்த்தால், நாம் இப்பொழுது வாழுகிற பூமியும் ஏற்கனவே மரித்தவர்கள் வாழுகிற பாதாளத்தையும் குறிக்கிறதாயிருக்கும். பாதாளத்தில் இரண்டு பரதீசு (பரிசுத்தவான்கள் வாழுமிடம்) வேதனையுள்ள இடம் (தேவனுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்கள் உள்ள இடம். இதை விளக்கும்படி ஒரு வரைபடம் உபயோகப்படுத்த விரும்புகிறேன்.




உலகத்திலுள்ள கிறிஸ்துவின் சபையாருடைய ஐக்கியம் பரலோகத்தோடும், பரதீசோடும் ஆகிய மூன்று லோகங்களோடு உள்ளது. ஆனால், உலகத்தார் மற்றும் நாமகரண கூட்டத்தாருடைய ஐக்கியம் பூமியோடும், பாதாளத்திலே வேதனையுள்ள இடத்தோடு மட்டும் இருக்கிறது. நம்முடைய ஐக்கியம் தெய்வீகமான பரலோகத்தோடும் பிதாவாகிய தேவனோடும், கிறிஸ்துவோடும், பரிசுத்த ஆவியானவரோடும், ஆயிரமாயிரம் தேவ தூதர்களோடும் உள்ளது. ஆனால், அவிசுவாசியான மக்களுடைய ஐக்கியம் பாதாளத்தோடும் அழிவோடும் வேதனையோடு மட்டும் இருக்கிறது. இப்பொழுது நாம் எப்படிப்பட்டவர்கள் என்பது விளங்கியது அல்லவா!

கிறிஸ்துவின் சபை என்பது பரலோகம், பூமி, பரதீசு ஆகிய மூன்று லோகங்களிலுள்ளவர்களையும் உள்ளடக்கிய ஓர் அமைப்பாக இருக்கிறது. ஏனென்றால், சபையை திட்டமிட்டவர் பிதாவாகிய தேவன் பரலோகத்திலிருக்கிறார். சபையின் ஒரே தலைவர் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்திலே பரலோகத்திருக்கிறார். அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் முதற்கொண்டு இந்நாள் வரை கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் பரதீசில் இருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சபையாக தேவனை ஆராதிப்பவர்கள் பூமியில் இருக்கிறோம். இதுதான் தேவனுடைய குடும்பம், தேவனுடைய ஆலயம், கிறிஸ்துவின் சபை.

ஒரு பட்டணம் அல்லது ஒரு கிராமத்தில் இருந்தாலும் வேதத்தின் படி ஒவ்வொரு பிராந்திய சபையும் தனி அமைப்பாயிருக்கிறது. ஒரு

பிராந்திய சபை இன்னொரு பிராந்திய சபையின் மேல் அதிகாரம் செலுத்த முடியாது. கிறிஸ்துவே ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் தலைவராய் இருக்கிறார். அவரே சபைக்கு பிரதான ஆசாரியராயிருக்கிறார். சபையார் அனைவரும் அவருடைய சீஷர்களாகவும், அவருடைய பிரதான ஆசாரியத் துவத்திற்கு கீழே அனைவரும் ஆசாரியர்களாகவும் இருக்கிறோம். அதே நேரத்தில் ஒவ்வொரு பிராந்திய சபையும் மூப்பர்களை கொண்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய நோக்கமாயிருக்கிறது என்பதை வேதம் தெளிவுபடுத்துகிறது. தீத்து. 1,5ல் அப்போஸ்தலன் பவுல் தீத்துவுக்கு எழுதும் போது, நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கு, நான் உனக்கு கட்டளையிட்டபடியே, பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் என்று சொல்லுகிறார். மூப்பர்கள் சபையிலே இல்லாமல் இருப்பது குறைவானது என்பதாக குறிப்பிடுகிறார். மேலும், அவர்களுக்குண்டான கருவிகளாக தீத். 1:6,9 மற்றும் 1 தீமோ. 3:1,7 வசனங்களில் குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட தகுதிகள் உள்ளவர்களை சபையார் மூப்பர்களாக நியமிக்கலாம். மூப்பர்கள் உள்ள பிராந்திய சபையில் உதவிக்காரர்கள் இருப்பார்கள். அவர்களுக்கும் தகுதி சொல்லப்பட்டுள்ளன. (1 தீமோ. 3:8,10). மூப்பர்கள் இல்லாத சபைகளில் உதவிக்காரர்கள் இருப்ப தில்லை. அதற்குப் பதிலாக சபையின் ஊழியக்காரர் அவரோடு சில சகோதரர்கள் ஒரு குழுவாக சபையின் காணிக்கை மற்றும் நடவடிக்கைகளை கவனிக்கிறவர்களாயிருப்பார்கள். ஊழியக்காரர், நிச்சயமாக சபையின் தலைவர் அல்ல. மேலும், ஊழியக்காரரின் பெயரிலும் சபை அழைக்கப் படக்கூடாது. ஏனென்றால், சபையின் சொந்தக்காரர் கிறிஸ்துதான்.

இன்றைக்கு கிறிஸ்து பூமியில் இல்லையே. ஆகையால், சபையை நிர்வகிக்க ஒரு பூமிக்குரிய தலைவர் தேவை என்று நினைத்து அவர் களாகவே ஒரு அமைப்பையும் அதற்குரிய சட்ட திட்டங்களையும் வேதத்தில் இல்லாத நிபந்தனைகளையும் முறைமைகளையும் உருவாக்குகி றார்கள். அப்படிச் செய்தால் அந்த சபைக்கு கிறிஸ்துவானவர் தலைவரா யிருக்கவில்லை. அது மனிதனுடைய சபை ஆகும். கிறிஸ்துவானவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபைக்கு அவரே தலைவராக இருக்கிறார். அவருடைய சத்தியமே எல்லாவற்றிற்கும் போதுமானதாயிருக்கிறது.


முதலாம் நூற்றாண்டு சபையில் ஆரம்பத்தில் எருசலேமில் அப்போஸ்தலர்கள் இருந்தார்கள் (அப். 2:42). அதன்பிறகு, அப்போஸ் தலர்கள் மூப்பர்கள் இருந்தார்கள் (அப். 15:2,4). கடைசியாகப் பார்க்கும் போது மூப்பர்கள் மாத்திரமே இருந்தார்கள். (அப். 21:18) என்று பார்க்கி றோம். இன்றைக்கு கிறிஸ்துவின் சபையிலே அப்போஸ்தலர்கள் இருக் கிறார்களா? என்று கேட்டால் இருக்கிறார்கள் என்றே பதில் வரும். அதாவது, பரலோகம், பூலோகம், பரதீசு ஆகிய முழு சபையில் அவர்கள் ஒரு அங்கமாக இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு பூமியில் உள்ள பிராந்திய சபையில் அப்போஸ்தலர் இல்லை. ஆனால், மூப்பர்கள் இருக்க வேண்டும். அதற்காக ஊழியர்கள் போதிக்க வேண்டும் என்பது தேவனு டைய சித்தமாயிருக்கிறது. சபையின் காணிக்கை மூன்று காரியங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும் (1) சபையின் வளர்ச்சி (Edifications) (2) சுவிசேஷம் அறிவித்தல் (Evaupelison) (3) தர்ம சகாயம் (Renevoleuce) இந்த

காரியங்களை மூப்பர்கள் கவனிக்க வேண்டும். மூப்பர்கள் இல்லாத சபையில் ஊழியரும் சகோதரர்களுமான குழு கவனிக்க வேண்டும். முழு சபைக்கும் வரவு செலவு கணக்கு தெரிவிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு காலத்தி லும் தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். மூப்பர்களாக இருந்தார்கள், ஆசாரியர்கள் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டு சபையிலும் அப்போஸ்தலர்கள் இருக்கிறார்கள் (ஆனால், அவர்கள் பூமியில் இல்லை) தீர்க்கதரிசிகள் இருக்கிறார்கள் (பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு நேரடியாக பேசினவர்கள் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள்) முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்து வேதத்தை எழுதினவர்கள் மாற்கு, லூக்கா போன்ற வர்கள் பரதீசில் இருக்கிறார்கள். இப்பொழுது சபையில் தீர்க்கதரிசிகள் கிறிஸ்துவின் வருகை, நியாயத்தீர்ப்பு, பரலோக வாழ்க்கை போன்றவை களை எழுதப் பட்ட தீர்க்கதரிசனங்களை போதிக்கிற தீர்க்கதரிசிகள் (1 கொரி. 12:28,30; எபேசி. 4:13) வேதத்தை சபையின் மூலம் தெரிந்து கொண்டு போதிக்க வேண்டும். வசனத்திற்கு தவறான விளக்கம் அல்லது இணைவசனம் தந்தால் அவை தவறான உபதேசமாகும். காலத்தின் சூழ்நிலையை அறிந்து போதிக் காவிட்டால் அது கள்ள உபதேசமாகும். தேவனுடைய நோக்கத்தையும், எதிர்பார்ப்பையும் அறிந்து ஒரு வசனத்தை விளக்காவிட்டால் அதுவும் தவறான உபதேசத்திற்கு நம்மை வழிநடத்தும். ஆகவே, போதிக்கிறவர்கள் ஜாக்கிரதையாக போதிக்க வேண்டியது அவசியம் ஆகும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! மீண்டும் அடுத்த மாதம் புதிய கருத்தோடு ஆராய்வோம். தெளிவு பெறுவோம். ஆமென்.

## ஒருவர் ஜெபிக்கும்போது செய்யும் காரியங்கள்

1. அவர் பரலோகத் தகப்பனிடம் பேசுகிறார் (மத். 6:9)
2. அவர் தன்னுடைய விண்ணப்பத்திற்கு தேவனால் பதிலளிக்க முடியும் என்கிற தன் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார் (யாக். 1:5,6)
3. அவர் இயேசு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறார் (மத். 26:29)
4. அவர் இயேசு கிறிஸ்துவை தன்னுடைய மத்தியஸ்தராக செயல்பட அனுமதிக்கிறார் (1 தீமோ. 2:5).
5. அவர் மற்றவர்களிடத்தில் தனக்கு இருக்கிற அக்கறையைக் காட்டுகிறார் (யாக். 5:16)
6. அவர் ஜெபிப்பதன் மூலமாக தேவனைப் பிரியப்படுத்துகிறார் (நீதி. 15:8)

வசன ரீதியான கிறிஸ்துவின் சபை



# பாடம் - 30.

# முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் மாதிரி

**Bro. K. பாஸ்கர்**

திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் மாதிரி என்ற இந்தப் பாடம் இந்நாட்களிலே கிறிஸ்தவர்களாக வாழும் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. உலகத்திலிருக்கிற பல பிரிவினைச் சபைகளில் பல உபதேசங்களும் அதன் அடையாளங்களும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தைப் பின்பற்றுகிறதா, இல்லையா என்பதை நாம் அறிந்து கொள்ளவும் அதன் மூலம் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை நாம் தெரிந்து கொள்ளவும், இந்தப் பாடம் உதவி செய்யும்.

## I முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளங்கள்

இந்நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளங்களாக சிலைகள், சிலுவைகள், படங்கள் போன்றவைகள் காணப்படுகின்றது. இவைகள் எல்லாம் வேதாகமத்தின்படி இருப்பதாக அநேகர் நினைத்துக் கொண்டு செயல்படுகின்றனர். எனவேதான், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளங்களை புதிய ஏற்பாட்டில் படித்துப் பார்ப்பது மிகவும் அவசியமாகக் காணப்படுகின்றது. நாம் நினைப்பது போல கிறிஸ்தவம் என்பது சிலைகள், சிலுவைகள், இயேசு போன்ற படங்கள் அடையாளங்கள் அல்ல! அவைகள் எல்லாம் வேதாகமத்தில் இல்லாதவைகளாகும். பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த யூத ஜனங்களுக்கு தேவன் சிலை வணக்கம் கூடாது என்று கூறியிருக்கிறார் (யாத். *20:3,5*). இயேசு கிறிஸ்துவும் புதிய ஏற்பாட்டில் தேவன் ஆவியாயிருக்கிறார் என்றும் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்றார் (யோவான் *4:23,24*) மேலும், புதிய ஏற்பாட்டில் விக்கிரக ஆராதனைக்கு விலகி ஓடுங்கள் என்றும் நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் என்று கூறுகின்றது (*1* கொரி. *10:14; 1* யோவான் *5:21*) எனவே, சிலைகள் என்பது கிறிஸ்தவத்தின் அடையாளங்கள் அல்ல!

சிலுவைகள் கிறிஸ்தவத்தின் அடையாளங்கள் அல்ல! அநேகர் சிலுவையை புனிதமாக எண்ணி தங்கத்திலும், வெள்ளியிலும், செம்பு, சில்வர் போன்ற உலோகங்களால் செய்து கழுத்திலும், கையிலும் அணிந்து கொண்டிருக்கின்றனர். கிறிஸ்தவத்தின் அடையாளமாக அதைச் சொல்லு கின்றனர். ஆனால், சிலுவை ஒரு " தூக்கு " மரமாக பயன்படுத்தப்பட்டது. ரோம ராஜ்யத்திற்கு விரோதமாகக் குற்றஞ் செய்த அடிமைகளும் ரோம அரசாங்கத்திற்கு விரோதமாக புரட்சி செய்தவர்களையும் சிலுவையிலே அறைந்து

தூக்கிலிட்டார்கள். அதன்படி இயேசு கிறிஸ்துவையும் அவரோடு இரண்டு கள்ளர்களையும் சிலுவையில் அறைந்தார்கள் (லூக். 23:33).

அடுத்து, இயேசு போன்ற படங்களை (போட்டோ) அநேகர் தங்கள் வீடுகளில் வைத்துக்கொண்டு தங்களை கிறிஸ்தவர்கள் என்று அடையாளப் படுத்துகின்றனர். ஆனால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எந்த படமும் (போட்டோக்கள்) வைத்துக் கொண்டிருந்ததாக வேத ஆதாரம் இல்லை. இப்படியிருக்க சில கிறிஸ்தவ மாத இதழ்களில் (திருமறை ஆசான் இல்லை) இயேசு போன்ற படங்களை வெளியிடுவது இயேசுவை இழிவுபடுத்துவதாக இருக்கிறது என்பதை உணராதிருக்கின்றனர்.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் அடையாளம் இசைக் கருவிகளை இசைத்து, கைகளைத் தட்டி, அந்நியபாஷை என்ற பெயரில் அர்த்த மில்லாமல் உளறி ஆடுவதல்ல! இவைகள் எல்லாம் புதிய ஏற்பாட்டில் இல்லாதவைகளாகும்.

முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தின் மாதிரியை நாம் முதலில் அறிந்து கொள்வோமாக! புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் தான் கிறிஸ்தவத்தின் ஆரம்பம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் கட்டளையை நிறைவேற்று வதற்காக எருசலேமில் ஒரு வீட்டில் காத்துக் கொண்டிருந்தனர் (அப். 1:5,2:1). அப்பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையில் மூழ்கடிக்கப்பட்டனர். அதாவது பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் (அப். 1:4,2:2) அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படி வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். அப்போஸ்தலர் பேசின அந்நிய பாஷைகள் பதினேழு நாட்டு மொழிகளாக இருந்தன (அப். 2:5,11). அப்போஸ்தலர்கள் பேசின வார்த்தைகள் தேவனுடைய மகத்துவமான கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் அடங்கிய சுவிசேஷத்தைப் பேசினார்கள் (அப். 2:12,36) அப்போஸ்தலர்கள் பேசின அந்நிய பாஷையைக் கேட்ட அந்த பதினேழு நாட்டு யூதர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு அவர்களை நோக்கி நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றான். (அப். 2:37,38) உடனே அவனுடைய வார்த்தையை (அந்நிய பாஷையில் பேசின வார்த்தை) சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். (அப். 2:41).

அவர்கள் 1 அப்போஸ்தலருடைய உபத்திலும் 2. அந்நியயோந்நியமாக அப்பம் பிட்குதலிலும் 3. ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித் திருந்து 4. காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று கொடுத்தார்கள் 5. தேவனைத் துதித்து ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படு கிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் (அப். 2:42,47).

இந்த அதிகாரத்தில் சொல்லப்படும் வசனங்களிலுள்ள அடையா ளங்கள் கத்தோலிக்க சபையிலும் காண முடியாது, புராட்டஸ்டண்டு சபையிலும் காண முடியாது, பெந்தெகொஸ்தே சபைகளிலும் காண முடியாது. இந்தப் பிரிவினைச் சபைகளில் அந்நிய பாஷைகளில் பேசுவதாக சொல்லுகிறார்கள். ஆனால்,

அதைக் கேட்டு புரிந்து கொண்டு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் கேட்டதாகக் கேள்விப்படவே இல்லை. மேலும், அந்நிய பாஷைகளில் பேசி யாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதாக பார்த்ததும், கேட்டதுமில்லை! மேலும், இவர் களுடைய ஆராதனைகளில் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல ஐந்து கட்டளைக் கடைப்பிடிப்பதாகவுமில்லை என்பது குறிப்பிடத் தக்கது! எனவே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் அடையாளத்தை படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

## II முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் உபதேசம்

முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தின் உபதேசமானது கிறிஸ்துவின் கட்டளைகளால் உண்டாயிருக்கிறது. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத். 28:20) இதன் அடிப்படையில் அப்போஸ்தலர்கள் இயேசுவின் கட்டளைகளை உபதேசித்தனர் (1 கொரி. 14:37) அது அப்போஸ்த லரின் உபதேசமாக இருந்தது. (அப். 2:42) எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்த வர்கள் அப்போஸ்தலரின் உபதேசத்தை மட்டும் ஏற்றுக்கொண்டிருந்தனர். எனவே, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலரின் உபதேசத்தை மட்டும் ஏற்றுக்கொண்டிருந்தனர். இந்த முன் மாதிரி தான் நமக்கும் வேண்டும். ஆதிக்கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொள்ளாத உபதேசம் நமக்குத் தேவை இல்லை.

ஆனால், இன்று இயேசு போதிக்காததும், அப்போஸ்தலர்களால் சொல்லப்படாததும், ஆதிகிறிஸ்தவர்களால் கடைபிடிக்கப்படாத நிறைய தவறான உபதேசங்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, ஆராதனையில் இசைக்கருவிகளை இசைப்பது, மாதத்தின் முதல் நாளில் அதாவது 1ந் தேதி கர்த்தர் பந்தி ஆசரிப்பது, அல்லது மாதத்தின் ஒருமுறை கர்த்தர் பந்தியின் பங்கு பெறுவது, சபையில் பெண்கள் போதிப்பது போன்ற உபதேசங் களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த உபதேசங்கள் இயேசு கிறிஸ்துவால் கட்டளையிடப்படாததாகும். மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும் போது ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக் கக்கடவன் என்று எழுதுகிறார் (1 பேதுரு 4:11)

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும் பொழுது எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாம் என்றார் (1 கொரி. 4:6). மேலும், புதிய ஏற்பாடு முடியும் போது அப்போஸ்தலனாகிய யோவான் கடைசியாக எச்சரித்ததாவது இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சி யாக எச்சரிக்கிறதாவது. ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைத் தேவன் அவன் மேல் கூட்டு வார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதை யாகிலும் எடுத்துப்போட்டால் ஜீவ புஸ்தகத்திலிருந்தும் பரிசுத்த நகரத்திலி ருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் என்றார் (வெளி. 22:18,19). எனவே, வேதத்தில் இல்லாத மனிதனுடைய உபதேசங்களை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது (கொலோ. 2:21,22). கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத் திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் ஒருவன் உங்களிடத்தில்

வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியை களுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான் (2 யோவான் 9,11). எனவே, நாம் கிறிஸ்து கட்டளையிட்ட அப்போஸ்தலருடைய உபதேசத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்திற்குத் திரும்பக் கடவோம்.

## III முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தின் சபையின் அமைப்பு

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை, சபையின் அமைப்பை இந்த நூற்றாண்டில் இருக்கும் அநேக சபைகள் கெடுத்துவிட்டது! எப்படி யெனில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையிலிருந்து மூப்பர்களை வரவழைத்தார். (அப். 20:17,18) இங்கே ஒரு சபையில் பல மூப்பர்கள் இருந்தார்கள். இது முதல் நூற்றாண்டு சபையின் அமைப்பு. ஆனால், இன்று ஒரு மூப்பர் (பிஷப்) பல சபை களுக்குத் தலைவராக இருக்கின்றனர். இந்த அமைப்பு வேதாகமத்தின்படியல்ல! இது முதல் நூற்றாண்டு சபையின் அமைப்பைக் கெடுக்கிறது!

மூப்பர்களுடைய பெயர்களும் அவர்களுடைய வேலைகளையும் இன்றைய நாளில் மாற்றி சபையின் அமைப்பையே மாற்றியிருக்கிறார்கள். எப்படியெனில், பவுல் எபேசு பட்டணத்திலிருந்த சபையின் மூப்பர்களை வர வழைத்து, 'ஆகையால், உங்களைக் குறித்தும் தேவன் தம்முடைய சுய ரத்தத்தி னாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங் குறித்தும் எச்சரிக்கை யாயிருங்கள் " என்றார் (அப். 20:28).

இந்த வசனத்தில் மூப்பர்கள் (Elders) தான் மேய்ப்பர்கள் என்றும் அதே மூப்பர்கள் (Elders) தான் கண்காணிகள் (Overseers) என்றும் கூறுகின்றார். இந்த மூன்று பதமும் தனித்தனி நபரைச் சொல்லாமல் அவர்கள் செய்யும் வேலைகளைச் சொல்லுகிறார். அதாவது மூப்பர் என்றால் வயதிலே மூத்த, முதியவரைக் குறிக்கும். சபையில் இருக்கும் முதியவர்கள் சபையாரை மேய்க்க வேண்டும் (Pastors) சபையாரைக் கண்காணிக்க வேண்டும் (Bishops) என்று சொல்லுகிறார். இந்த பரிசுத்த அமைப்பை இன்றுள்ள அநேக பிரிவினைச் சபைகள் மாற்றி விட்டனர். பரிசுத்த அமைப்பைக் கெடுத்து விட்டனர். அதாவது, மூப்பர் தனிப்பட்டம், பாஸ்டர் தனிப்பட்டம், பிஷப் தனிப்பட்டம் கொடுத்து சபையின் அமைப்பை கெடுத்துவிட்டனர்.

முதல் நூற்றாண்டு சபையின் அமைப்பை நம்மில் சிலர் கெடுத்து விடுகிறோம். அது எப்படியென்றால் தகுதியற்ற சிலர் ஊழியக்காரராக இருப்பதால் அவர்கள் அதிகாரி போலவும், சபையார் அடிமைகளாகவும் நடத்தப்படுவதால் கிறிஸ்துவின் சபையின் அமைப்பைக் கெடுத்து விடு கின்றனர். நாம் யாரும் யாருக்கும் அடிமைகள் இல்லை கிறிஸ்து ஒருவருக்கே அடிமைகளாக இருக்கிறோம் மனிதனுக்கு அல்ல! (1 கொரி. 7:22).

நாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தை மாதிரியாகக் கொள்வோம். வேத வசனத்திற்கு முதலிடம் கொடுத்து அதை செயல்படுத்துவோம். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து வாக்களித் துள்ளார் (மத். 27:20)

**(தொடரும்)**

முகாமில் உணவு வேளையின் போது...



Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014

முகாமில் பங்கு பெற்ற பெண்கள் மற்றும் இளம் பெண்கள்...





முகாமில் சிறுவர் சிறுமியர் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளுடன்...





முகாமில் ஆண்களுக்கான வகுப்பின் போது...

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.

முகாமில் பகல் நேர வகுப்பின் போது திரண்டிருந்தவர்கள்...





காலை தியான நேரத்தின்போது...



திருமுழுக்கு சிறப்பு வகுப்பில்...



ஏப்ரல் 8 - 10, 2013 ஏற்காடு மலையில் நடந்த சிறப்பு வகுப்பில்...



Bro. Jerry & Paula Bates who taught Yercaud Seminar



Preachers who attended Seminar



Preachers with Open Bible gifted to them

